க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1924ஆ அக்டோபர்மீ | இதழ் 2.

தெய்வ வழிபாடு.

"உய்யும் படிக்குன் றிருக்கருணை யொன்றைக் கொடுத்தா லுடையாய்பாழ்ம்
பொய்யு மவாவு மழுக்காறும் புடைபட் டோடு நன்னெறியா
மெய்யு மறிவு பெறும்பேறும் விளக்கு மெனக்கு னடியார்பால்
செய்யும் பணியுங் கைகூடும் சிந்தைத் துயரந் தீர்ந்திடுமே."

——(0)——

நாடார் மஹாஜன சங்கம்.

ஒன்பதாவது கான்பரன்ஸ், மதுரை.

உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான், கூ. மு. அ. வடிவேல்முருக நாடார் அவர்களின் பிரசங்கம்.

1924-ம் ஆ ஜூன்மீ 18, 19, 20-ந்தேதிகளில் நடைபெற்றது.

முதல்நாள் நடவடிக்கை.

(முன்றொடர்ச்சி.)

மகமை.

மகமை என்பது ஒருவர் கொடுக்கும் தருமக்கடை. ஆதிகாலத்தில் நம்மவர்களால் மகமை ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து நம்மவர்களை ஒற்றுமைக் குட்படுத்தியும் அநேக சட்ட திட்டங்களை ஏற்படுத்தியும் மகமைப் பணத்திலிருந்து நம்மவர்களுடைய சௌகரியத்திற்காக அந்தந்த ஊர்க்காரர்களால் அந்தந்த ஊர்களின் கோவில்களும், குளங்களும், சத்திரங்களும், பேட்டைகளும், கல்விச்சாலைகளும் ஏற்படுத்தியும் நம்மவர்களுக்குள் கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் ஏற்படும் சண்டை சச்சரவுகளை நமது உறவின் முறையார்களே தீர்த்து வைத்தும் இருந்த ஏற்பாட்டை இப்பொழுது நவீன நாகரீகத்தின் மாய்கையில் மூழ்கி இருக்கும் கனவான்கள் உடைத்து

எறிந்துவிட்டார்கள். ஆகையால் அங்கங்குள்ள மகமையெல்லாம் சீர்கெட்டுப்போயிருக்கிறது. மகமையை முன்போல் சீர்திருத்தம் செய்து ஒற்றுமையாயிருப்போமேயானால் நாம் நினைத்தக்காரியத்தை யெல்லாம் எளிதில்முடிக்கலாம்.

சிதம்பர மகமையைப்பற்றி பத்திரிகைகளிலும், பலவிடங்களிலும் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறபடியால் அதன் விருத்தாந்தங்களைப் பற்றி எனக்குத் தெரிந்தவரை சிற்சிலவார்த்தைகள் கூறுவது மிகையாகாது முதல்முதலில் விருதுநகரிலுள்ள நம்மவர்கள் சிதம்பர மகமை என்று ஏற்படுத்தி சிதம்பரத்தில் உச்சிக்கால பூஜை, செடி விளக்கு, பால்காவடி முதலியவைகளை நடத்திவந்து பின்னிட்டு சில காரணங்களால் விட்டுவிட்டார்கள் அந்தக் காலத்தில் சிதம்பரத்தில் நமக்கு கட்டளை நடத்திவந்த பிரம்மஸ்ரீ, கஞ்சசகாசபூஷண தீக்ஷிதர் அவர்கள் இந்த தர்மத்தை நாடார்களுக்கு தவிர மற்றவர்களுக்கு இல்லையென்று உறுதிகூறினார்கள். அதன் பாத்தியதையை மற்ற சாதியினர்கள் கைக்கொள்ள பெரும்பாடுபட்டும் முயற்சி பலிதமாகவில்லை. அதன் பிறகு மற்றவர் நம்மவர்களால் அதைச்செய்ய முடியாதென்று தள்ளிவிடப்பட்டதை இந்நகர் நம் ஜாதிய வியாபாரிகள் அந்தக்காலத்தில் ரொக்கவிலைச் சரக்குகளுக்கு ரூபாய் ஒன்றுக்கு பைசா ஒன்றரைவிதம் வட்டம்பிடித்து உடனே ரூபாய் கொடுத்து மேற்படி வட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு அதாவது ரூபாய் ஒன்றுக்கு பைசா அரை விதம் கொடுத்த சிதம்பர மகமையிலிருந்து, சிதம்பரத்தில் உச்சிக்கார பூஜையும் பால்காவடியும் செடிவிளக்கும் ஆவணி மூல திருவிழா மண்டபமும் நடத்திவந்தார்கள். அப்பால் பழனியில் ஆஸ்தான மண்டபம் அரைகுறை வேலையாயிருந்ததை கட்டுவதற்காகவும் திருப்பரங்குன்றம் ஆஸ்தான மண்டபம் மகாமண்டபம் இவைகளுக்கு தளவரிசை போடுவதற்காகவும் "சிதம்பரம் பழனி மகமை" என்று ஏற்படுத்தி ரூ ஒன்றுக்கு பைசா ஒன்றரை விதம் வட்டம் வாங்கி ரூ ஒன்றுக்கு பைசா அரை விதம் இருந்துவந்த மகமையை ரூபாய் ஒன்றுக்கு பைசா ஒன்று விதம் உயர்த்தி வசூலித்த பணத்திலிருந்து திருப்பரங் குன்றத்தில் தளவரிசை போட்டதோடு பழனியில் ஆஸ்தான மண்டப வேலைகள் சில மாத்திரம் செய்வித்ததோடு மேற்படி யூரில் நம்மவர்களால் செய்யப்பட்டிருந்த தங்கக்குதிரை பழமையாய் போய் விட்டபடியால் புதுப்பிக்கப்பட்டது.

சிதம்பர மகமை ஏற்பட்டிருந்த காலத்தில் கமிஷன் வியாபாரம் செய்பவர்கள் சொந்த வியாபாரம் செய்யக்கூடாதென்றும் வாத்து வியாபாரிகளுக்கு இந்த மனுவுக்கு குறைவாகச் சரக்குபோடக் கூடாதென்றும் சரக்குகளை சுத்தம் செய்யாமல் விற்கக்கூடாதென்றும் சரக்குகளுக்கு பொதுவாக ஒரு விலை வைத்து அந்தவிலைபாகத்தான் அன்றையத் தினம் விற்கவேண்டுமென்றும், பலர் அரிய பெரிய வியாபாரக் கட்டுதிட்டங்களுடன் ஒழுங்காயும் ஒற்றுமையாயும் வியாபாரம்நடைபெற்று வந்தது. அப்பால் வியாபார விருத்தி ஏற்பட்டதினால் சரக்குகளுக்கு ௨௰-நாள்தவணை என்றும் வழக்கப்போல் வட்டமும் பிடித்துக் கொண்டு ரூ ஒன்றுக்கு பைசா ஒன்று விதம் சிதம்பர மகமை கொடுக்கப்பட்டு வந்தது. மேற்படி சட்டதிட்டங்களைப் பற்றி விரிக்கிற் பெருகும் என்றஞ்சி இத்துடன் விடுத்தனன். மேற்படி மகமையை நிர்வகித்து வந்த முறைகாரர்களுக்குள் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு, பல வழிகளிலும் மகமை சின்னபோய் மகமைப் பணமெல்லாம் முறைகாரர்களிடமே தங்கி விட்டது. இப்பொழுதும் மேற்படி மகமைப் பணம் ரூபாய் நூற்றுக்கு மாசம் ஒன்றுக்கு வட்டி ரூபாய் அரையே அரைக்கால், முக்கால் வீதமாகவே இருந்துவருகிறது. மேற்படி மகமைமூலப் பணத்திலிருந்துவரும் வட்டியைக்கொண்டு சிதம்பரத்தில் நடக்கவேண்டிய காரியங்கள் நடைபெற்று வருகிறதுடன்பழனியிலும் சிற்சில காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

சிதம்பர மகமையைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று பல தடவைகளிலும் முயற்சி

எடுத்தும் பலனடையவில்லை. இப்போது நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவெனில், நம்மவர்கள் ரூபாய் நூறுக்கு வட்டம் ரூபாய் 0—12—6 பிடித்து ரூபாய் நூற்றுக்கு சிதம்பர மகமை ரூ 0-8-1 எழுதி விடுகிறோம். ஆனால் பிறஜாதி வியாபாரிகளோ ரூபாய் நூறுக்கு வட்டம் 0—12—6 பிடித்து அதைத் தாங்களே லாபமடைகிறார்கள். ஆகையால் நமக்கு இதனால் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறதென்று யோசித்துப் பாருங்கள். ஆகையால் இப்போது நடந்து வருவதைப்போல சிதம்பர மகமை வட்டிப் பணத்திலிருந்தே சிதம்பரத்திலும் பழனியிலும் நடை பெறும் காரியங்கள் நடைபெற்று வரட்டும் சிதம்பர மகமையை சீர்திருத்தஞ்செய்து ஆதிகாலத்தில் முதலாவது ஏற்பட்டபடி ரூ நூறுக்கு பிடித்துக்கொள்ளும் வட்டம் ரூ 0—12—6ல் சிதம்பர மகமை 0—4—2 (அதாவது ரூபாய் ஒன்றுக்கு பைசா அரை விதம்) கொடுத்து நம்மவர்களின் கல்வியபிவிர்த்திக்காக உபயோகமாகும்படி செய்து வைக்கும்படியாய் உங்களை மிகவும்வணக்கமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

வாலிப நம்மவர் மகாநாடு.

இந்தச் சந்தர்ப்பத்தில் நம்மவர்கள் வாலிபர் மகாநாடு கூடவேண்டுமென்று நம்குல பத்திரிகைகளிலிருந்தும், பிரசாரகர்கள் அபிமானிகள் வாய்கள்மூலமாயும் வெளிவருவதைப்பற்றி என்னுடைய மனதிலுள்ளவைகளையும் இங்கு சொல்ல இடங் கொடுப்பீர்களென்று நம்புகிறேன், நான் சொல்லப்புகும் விஷயங்கள் சில வாலிபர்களுக்கு மனத் தாங்கலை உண்டாக்குமாயினும் சொல்லவேண்டியது என்னுடைய கடமையாகக் கருதுகின்றபடியால் நான் சொல்வதை அங்கீகரிப்பீர்களென்று நம்புகிறேன்.

சிலர், வாலிபர் மகாநாட்டின் திட்டத்தை நமது மகாஜனசங்கத்தின் உத்தேசத்திற்கேற்ப தயார்செய்ய வேண்டுமென்றும், சிலர் தனித் திட்டம் ஏற்படுத்திக்கொண்டு நமது மகாஜன சங்கத்தை வேறுபடுத்தி வாலிபர் மகாநாட்டைத்தனியே நடத்தவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

வாலிப நம்மவர் மகாநாடு கூடுவதைப் பார்க்கிலும், நம் ஜாதியின் குறைகளை நிவர்த்தி செய்து நம் ஜாதி மேம்பாடடையும்படி செய்ய வேண்டுவதே வாலிபர்களின் முதலாவது கடமையாகும். அதற்காகச் செய்யவேண்டுவதென்ன? காலமாறுபாட்டால், பனைமரத்தடியிலே கிடந்துழலும், சிற்சில நம் சகோதரர்களை, நமது மகாஜன சங்கத்தின் தீர்மானப்படி பஞ்சமகாபாதகங்களி லொன்றானதும் அனுசாரத் தொழிலுமான கள் இறக்கும் தொழிலை அடியோடு நிறுத்தும்படி செய்து, குலாபிமானிகளிடம் சென்று நம்குல முன்னேற்றத்திற்காக பணம் வாங்கி பல தொழிற்சாலைகளை ஆங்காங்கு ஏற்படுத்தி ஷை கள் இறக்கும் தொழிலைவிட்ட நம் சகோதரர்களுக்கு வேலை கொடுத்து உதவுவதுடன், பண உதவியும் செய்து, அவர்களுடைய பின் சந்ததியார்களாகிய சிறுவர் சிறுமிகளுக்கு கிராமங்கள்தோறும் பிரதம பாடசாலைகள் ஏற்படுத்தும்படி செய்து கட்டாயமாய் கல்விகற்கவேண்டுமென்று சட்டமியற்றி கல்வியை யூட்டி வருவோமானால் நம் ஜாதியினர்களின் பெருங்குறை நீக்கப்படுவதோடு நாம் நம் தேசத்தில் வெகுதூரம் முன்னேறி இருப்போமென்பதற்குச் சந்தேகமேயில்லை.

பாரத மாதாவின் அருந்தவப் புதல்வர் என்று போற்றப்பெறும் மகாத்மாகாந்தி அவர்களும் தேச முன்னேற்றத்திற்காக வென்று நிர்மாணத்திட்டங்களை ஏற்படுத்தி எப்பொழுதும் அதையே அநுஷ்டானத்தில் நிறைவேற்றி வைக்கும்படியாய் தேச மகாஜனங்களுக்கு ஆக்ஞை இட்டிருக்கிறார்கள். ஆனால் நாச வேலையை ஒப்புக்கொள்கின்றார்களில்லை அதுபோல் நாமும் நம்முடைய மகாஜனசங்கத்தின் தீர்மானங்களாகிய நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றி வைக்காமல் நம் சங்கத்தை வேறுபடுத்தி நாச வேலையை மேற்கொள்வோமேயானால் நம்முடைய முற்போக்கு பிற்போக்காய் முடியும். ஆகையால் நமக்குத் தலையாய் விளங்கும் நமது மகாஜன சங்கத்துடன் வாலிபர்கள் ஒத்துழைத்து அதற்கு வாலிப

ஊக்கத்தை ஊட்டி அதை வாலிபமாக்கி நமது கான்பரன்ஸையே வாலிப நாடார் மகாநாடாகச் செய்து நம்முடைய நிர்மாணவேலைகளைச் செய்து முடிப்போமாக. இந்த நெருக்கடியான நேரத்திலும் நம் ஜாதியின் குறைகள் நிவர்த்தியாகிக் கொண்டுவரும் சமயத்திலும், பூஜை வேளையில் கரடியை விடுவதுபோல, நம்முடைய சங்கத்தின் நிர்மாண வேலைகளை நிறைவேற்றாது அதை வேறுபடுத்தி, வாலிபர் நம்மவர் மகாநாடு கூடுமேயானால் நம்ஜன சமூகத்திற்கே பெரும் தீங்கு விளையுமென்பதை எச்சரிக்கை செய்கிறேன். ஆகையால் வாலிப நாடார் மகாநாடு கூடவேண்டுமென்ற அவசியமே இல்லை. வயதில் முதிர்ந்தோர்களாகிய எங்களுக்கு பின் சந்ததியாராக விளங்கும் வாலிப சிங்கங்களே! நம்முடைய சங்கத்தின் ஆதரவில் நம்ஜாதி முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வாருங்கள். இம்மாதிரியாக முன்வரும் வாலிபர்களை இருகரங்களையும் ஏந்தி நமது நாடார் மகாஜன சங்கம் எதிர்கொண்டழைக்கிறது. அப்படி அவர்கள்முன்வருவார்களேயானால் நம்முடைய ஜாதிக்கும் பொது ஜனங்களுக்கும், நம் தேசத்துக்குமே தொண்டுசெய்து பெரும் நன்மையைச் செய்தவர்களாவார்கள்.

நாம் காங்கரஸ் மகாசபையில் கலந்துகொண்டால் நம்மவர்களின் குறைகள் நீங்கிவிடும் என்று நம்பும் நம்மவர்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

நம்மவர்களுடைய குறைகளை நாமேநிவர்த்தி செய்து கொள்ளவேண்டுமே யொழிய பிறரால் நிவர்த்தி செய்ய முடியுமா? முடியாது. அதற்காகச் செய்யவேண்டுவதென்ன? நமது மகாஜன சங்கத்தின் நிர்மாணத்திட்டங்களை நிறைவேற்றி நம்குல சிறுவர் சிறுமிகளுக்கு கட்டாயமாய் பிரதமப் படிப்பாவது கற்றுக்கொடுக்க நான் முன்னாடியே சொல்லியிருப்பதைப்போல செய்துவிடுவீர்களேயானால் நம் பாரத பூமியின் தென்பாகமாகிய திருநெல்வேலி ராமநாதபுரம் மதுரை முதலிய ஜில்லாக்களுக்கு பெரும் நன்மையைச் செய்தவர்களாவீர்கள். நாம் நம் ஜனக்குறைகளை நிவர்த்திசெய்து கொள்ளுவோமேயானால் நம் தேசத்தின் மற்ற இடங்களெல்லாம் நம்மைப்போல் தாமாகவே முன்னேறிவிடும். ஆகையால் நம் ஜாதி முன்னேற்றமடையுமானால் நம் தேசமே முன்னேற்றமடைவதற்கு சமானமாகும். நம் ஜாதி முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வரும் வாலிப தியாகிகள் முன்வருக.

முடிவுரை.

பொறுமையாளர்களே!

என்னை ஒரு பொருட்டாக எண்ணி இந்த கௌரவமான பதவியை எனக்குக் கொடுத்ததற்காக எனது உள்ளம் பூரிக்கின்றது. இன்னும் நான் அநேக விஷயங்களைப்பற்றிச் சொல்லவேண்டுமென்று நினைத்தேன். ஆனால் தங்களுடைய அருமையான காலத்தை வீணாக்க வேண்டுமே என்று அஞ்சி, இன்னும் சில வார்த்தைகளை கூறிவிட்டு முடித்துவிடுகிறேன். இதுவரையிலும் என்னுடைய சொற்களை செவிமடுத்து என்னை யாதரித்ததற்காக உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இன்று நமது கான்பரன்ஸை திறந்துவைத்து அக்கிராசனம் வகிக்க மனமுவந்து சம்மதித்திருக்கும் நமது சென்னை மாகாண கல்விமந்திரி ஹானரபிள் சர் ஏ. பி. பத்ரோ அவர்களைப் பற்றி நீங்கள் எல்லோரும் அறிந்திருக்கிறீர்கள். அவர் நம்முடைய மாகாணத்தின் கல்வி மந்திரியாக வரு முன்னமேயே நம்முடைய ஜாதியின் கல்வி அபிவிர்த்தியில் அதிக கவனம் செலுத்தியவர் என்பதற்கு அநுகுணமாக, நமது பால்ய சிங்கம், சிவகாசி மகா-ள-ள-ஸ்ரீ, எஸ். நடராஜ நாடார் பி. ஏ.; பி. எல்.; அவர்களை ஐ. சி. எஸ்.; வாசிப்பதற்காக லண்டனுக்கு அனுப்ப வெகு பிரயாசை எடுத்திருக்கிறார்கள். அசந்தர்ப்பங்களால் அவர் ஐ. சி. எஸ், பரீக்ஷைக்கு வாசிக்கப்போவது நின்றுவிட்டது.

ஆனால் எம்பெருமான் திருவருளால் நமக்கு கல்வி மந்திரியாக இன்னவர் வந்திருப்பதால் நம் ஜன சமூகத்திற்கு கல்வி விஷயத்தில் அநேக நன்மைகள் செய்வாரென்பதற்கு சந்

தேகமில்லை. இன்னவர் நமது கான்பரன்ஸில் அக்கிராசனம் வகித்து அரிய உபதேசங்கள் செய்வதைக்கேட்கக் கிடைத்த பாக்கியம் கடவுளின் கிருபாகடாக்ஷமேயாகும். கல்வியை விருத்திசெய்யும் நம்மவர்களுக்கு இன்னாரின் உபதேசம் பெரும் பொக்கிஷமே யாகும். அவர் நமக்கு உபதேசித்தருளும் வார்த்தைகளின்படி ஒவ்வொருவரும் நடக்கும்படியாய் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். வரவேற்பு சபையின் பிரதிநிதியாக உங்கள் எல்லோருக்கும் நான் மறுமுறையும் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தி உங்களை வரவேற்கிறேன். எல்லாம்வல்ல இறைவன் நமக்கு நல்லருள் சுரப்பாராக. சுபம்! சுபம்!!

அமிழ்தினு மினிய தமிழ் மொழியின் மாண்பு.

(ஏ. இராஜநாயக நாடார், மாவிடுபெண்ணை.)

(முன்தொடர்ச்சி.)

நிற்க, தமிழைக் கட்டாய பாடமாக வைக்காமல் ஏதோ தானேவென்று (ஏ. வி.) பிரிவாகவைத்து மாணவர்கள் இஷ்டப்படி விடுவது வெறுக்கத்தக்கது. இங்கிலீஷ் எப்படிக் கட்டாயப்பாடமாகக் கருதப்படுகிறதோ அங்ஙனமே தமிழையும் கட்டாயப் பாடமாக்க வேண்டும். நலம்பொருந்திய சீர்திருத்தங்கள் தமிழ்மொழி விருத்திக்கு இன்றியமையாது வேண்டப்படுகிறது. நமது சங்க நூற்களையும், நன்னூல், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் அபரிமிதமாய் பாடமாகக் குறிக்கவேண்டும். தற்கால (ஸிலபஸ்) பாடக்குறிப்பு அத்தகைய தகுதி யுடையதல்ல. அநேகமானவர் வருடமுழுதும் தமிழ்பாடத்தைக் கையிலெடுக்க வெட்கங்கொண்டு, பரீட்சையிலும் போய் பூரண வெற்றியுமடைகிறார்கள். விந்தையன்றோ? தமிழ்ச் செல்வியைப் பேராசிரியர்கள் எங்ஙனம் கருதுகிறார்கள். என்பது தெற்றெனப் புலப்படவில்லையா? உயர்தர கலாசாலையில் பயில்பவர்களுக்குப் புணரியியலில் ஓர் சூத்திரங்கூடத் தெரியுதில்லை எனச் சிலப் புலவர்கள் சொல்ல யாம் கேட்டிருக்கிறோம். கல்விச் சங்கத்தார் எவ்வளவு கடினமான பாடங்களை இம் மாணவர்களுக்கு நியமித்திருக்கின்றனர். குதர்க்கவாதம்செய்யும் மாணவர் மலிந்திருக்கும் காலையில் மரூஉ மொழி நீக்கிப்பேச முடிவதில்லை. நாம் எல்லா மாணவரையும் குறைகூறவில்லை. தமிழபிமானமிகுந்த மாணவர்கள் இக்காலத்தில் இல்லாமலுமில்லை. ஆனால் நூற்றுக்கு பத்துக்கூட இத்தகைய நல்ல மாணவர்கள் கிடைக்கப் பெறவில்லை என்று யாம் மனவருத்தமுடன் தெரிவிக்கிறோம்.

ஆங்கிலம் கற்பதற்கு விநாடிகூடக் கிடைபாதாவெனப் பரதவிக்கும் மாணவர்கள் தமிழைப் புரக்கணிப்பது எற்றுக்கென கேட்கிறோம். இதனால் நாம் தானே நமது செல்வியைக் காலால் உதைக்கிறவர்களாகிறோம். என்னகொடுமை? தமிழ் பரீட்சையில் வெற்றி பெறுவிட்டாலும், சபாஷ்பட்டம் கொடுத்துவிடுவதால் மாணவர்களுக்கு சோம்பல் நேரிடுகிறது. ஏன் தமிழ்வெற்றிபெறாதவர்களை உயர்ந்த வகுப்புக்கு அனுப்படவேண்டும். இக் குறையும் நிவர்த்திக்கவேண்டும். அதோடு நூற்றெறிவாகர் (Test Book Committee) விரும்பத்தகாத நூற்களையும், செய்யுட்களையும் பாடப்புத்தகத்தில் இணைத்துவிடுகிறார்கள். பரிதாபம்! வித்வக் குழாங்கள் மலரென அணிந்திடும் சங்கமருவிய நூற்கள் இவர்கள் கண்ணுக்குத் தோற்றவில்லையோ? அமுதபிள்ளையும் சிரிக்கும் ரமணியமான நூற்களைத் தெரிந்தெடாது, கனியிருக்கக் காய் கவர்ந்தவாறு இவர்கள் இருப்பதென்னே? தமிழ் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மதிப்போ எத்துணை சிரேஷ்டமாயிருக்கிறது. அந்தோ! தமிழ் கற்கும் மாணவர்கள் ஆசிரியரைத் தேடிப்போவதில்லை.

ஆசிரியர்களே இவர்களைத் தேடிப்போகவேண்டும். உபாத்தியாயர் தாமதமாய் வந்தால் மாணவர் கோபித்துக்கொள்வார். ஆனால் ஆங்கில ஆசிரியரைக் கண்டமாத்திரம், கிரியைக் கண்ட சர்ப்பம்போல் பதுங்கி, தீயிலகப்பட்ட மெழுகுபோல் உருகிடுவர். எல்லா வல்லமையும் இத்துரையிடம் இருப்பதால் இங்ஙனம் நேரிடுகிறது. இதைப்போன்ற மதிப்பு என்றுவருமோ?

சிலர் மிக்க உயர்தரக் கலாசாலையில் பெருமையாய்த் தேரிவிட்டு சல்லாபமாய் வரும்போது, நன்னூலிலாவது, தொல்காப்பியத்திலாவது ஒரு சூத்திரமாவது மனனஞ்செய்திருக்கிறீர்களா என வினவின் (Dont Want) தேவையில்லை என ஒரே பதிலிறுத்துவிடுகின்றனர். தமிழ் தாயின் வயிற்றில் பிறந்த இவர்களுக்கும் எண்ணமென்றால் நாம்மற்றவர்களைச் சொல்லவும் வேண்டுமோ?

தமிழைக் கற்றுக்கொடுப்பதற்கு நல்லிசைப் புலவர்களைத் தேர்ந்தெடாது ஆங்கிலங் கற்றவர்களையே நியமிக்கிறார்கள். இத்தகைய ஆசிரியர்கள், நியமிக்கப்பட்ட அன்றுதான் நன்னூலையும், மணிமேகலையும் கையி தூக்குகிறார்கள். தமிழ்மாது பெற்ற பாக்கியந்தானென்ன? கலாசாலையில் தமிழ் கற்றுக்கொடுப்பதற்குத் தகுதியான காலமும் கொடுக்கப்படுகிறதில்லை. இதுவும் மிகவும் கஷ்டமாகமுடிகிறது. ஐயோ! இன்னமும் ஏற்பட்டுள்ள குறைகளைச் சொல்ல எமக்கும்பிரியமில்லை. மித்திரனும் இடந்தரான்.

இன்னமும் இத்தகைய சீர்கேட்டுக்கு இடங்கொடுத்தால் தமிழின் பிற்கால முடிவைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. தமிழபிமானிகள் யாவரும் சிறந்த முயற்சி எடுத்துப் பாடுபடவேண்டும். கனம் மந்திரியார் உள்பட கல்விச் சபையாரும் தீவிர முயற்சி எடுத்து பெருமைகுலைந்த இம் மகோன்னத தெய்வப் பாஷை பெருமை யடையப் பாடுபடுமாறு பிரார்த்திக்கிறோம். சுபம்!

சேலம், க்ஷத்திரியனும், நாடார் பட்டமும்.

(V. S. K. துரைசாமி நாடார், B. A.; மாணவர், சிவகாசி.)

தங்குலப் பட்டங்களானபள்ளி படையாட்சி முதலியவைகள் கீழ்குலத்தைக் குறித்தலால் அவற்றைப் புறக்கணித்து, உயர்குலப் பட்டத்தை யணிந்து கொண்டால் அக்கணமே உயர்ந்தோனாகி விடலாமென மூடபுத்தி கொண்டு க்ஷத்திரிய வேடம்பூண்டு வர்மா வென்னும் புதியபட்டம் தரித்து, தங்குலத்தின் முற்கால தற்கால நிலைமையைத் தெளிவாக அறிந்துகொள்ளசக்தியில்லாது அர்த்தனாரீச... மாசற்ற மன்னர்குல சகோதரர்களான நாடார்களுக்குத் தமது மூடபுத்தியால் ஒவ்வொரு நாளும் சகிக்கொணாத் தீங்குகள் இழைத்து வருகிறாரென்பதைத் தென்னாட்டார் யாவரும் செவ்வையாக அறிந்துள்ளார்கள். நாடார் என்னும பட்டத்தின் பொருளைப்பற்றி, 'க்ஷத்திரியன்' பத்திராதிபர் மதிவெறி கொண்டவன்போல் மயங்கிச் சில மாதங்களாக அவ் வார்த்தைக்கும் புராண இதிகாசங்கள் ஒப்பாத குயுக்தியான வியாக்கியானம் செய்தார். க்ஷத்திரியகுலச் சிங்கமான கனம் கிராமணி அவர்கள், நாடார் எனும் பட்டம் நாட்டையாண்டவரையே குறிக்குமெனத் தொன்னூற் சான்றுகளுடன் தெற்றென விளக்கி, நாடார் என்னும் சொல்லின் உண்மைப் பொருளை மறைக்கும் பொருட்டுக் குயுக்தியாகப் பேசிய க்ஷத்திரியனது தீய நாவிற்குச் சரியானதோர் ஆப்பைக் கடாவினார். இதைக்கண்ட அர்த்தனாரீச...... திகைத்துப் பின்வாங்கித் தமது மூடச்செய்கையை நன்குணர்ந்தார். ஆயினும் நாடார்கள் மீது அவர்கொண்ட வீண்துவேஷம் அதிகரித்ததேயன்றி குறைந்தபாடில்லை. பின்னர் அவர் தமது வாதத்தை வேறுவிதமாகத் திருப்பித் தமது ஊத்தைவாயால், "நாடார் பட்டம் சானார்கட்குப் பரம்பரைப் பட்டமல்ல சமீப காலத்தில் ஏற்பட்டதென்பதற்கு வேண்டிய ஆதாரங்களுண்டு. தேச சரித்திரங்கள் போது

மான வரையில் சாக்ஷி சொல்லும். சென்ஸஸ் சரித்திரங்களும் சான்று பகரும்" எனக் கூறியுள்ளார். ஆனால் அவ்வாறு சான்று பகரும் சரித்திர ஆதாரங்களைத் தம் பத்திரிகையில் எடுத்துக் காட்டினாரில்லை. போதிய ஆதாரங்கள் இருந்தாலன்றோ அவற்றை வெளியிடுவார்! "மயிரைக் கொண்டு மாங்காயை எறிந்தால் மாங்காய் விழுந்தாலுஞ்சரி அல்லது மயிர் விழுந்தாலுஞ்சரி" என்னும் பழமொழியை 'க்ஷத்திரியன்' கையாண்டு வருகிறான். நாடார்கள் அவனது மாயவலைக்குள் அகப்படமாட்டார்களென்பது உலகறிந்த உண்மையாம். ஆகவே க்ஷத்திரியனுக்கு மயிர்தான் கிடைக்கும்.

அர்த்தநாரீச......தாம் மாத்திரம் 'நாடார்' பட்டம் பரம்பரையானதல்லவெனச் செப்பிநின்றிடாது, கொளும்பு மு. சண்முகம் சேர்வை என்பார் கைத்திட்டதாக 'சானாருக்குள்ளே தாரதம்மியம்' என்னும் தலைப்பின்கீழ் ஓர் வியாசத்தை வெளியிட்டிருக்கிறார். அவ்வியாசத்தின் இறுதியில் 'பனையேறிகளுக்கு 100-வருஷத்திற்கு முன்னாவது பின்னாவது ஒரு ரிக்கார்ட்டிலும் நாடார் என்ற பட்டப்பெயர் கிடையாது' என எழுதப்பட்டிருக்கிறது. 'நாடார்' என்னும் பட்டம் சான்றோர் ஜாதியார் இந்தியாவில் தோன்றிய நாள்முதல் இன்றுவரை இருந்துவருகிற பட்டமேயன்றிப் புதிதாக நாடார்களால் சில வாண்டுகளுக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டதல்லவென்பதைத் துவேஷபுத்தி நிறைந்துள்ள அர்த்தநாரீச...... போன்றவர்களைத் தவிர பிறர் யாவரும் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வார்களென்பதில் எட்டுணையும் சந்தேகமிலது. ஆயினும் நாடார்மீது அநியாயமாகக் குற்றங்கள் சாற்றும் பள்ளி குலத்தோர்க்குச் சிறிது புத்தி புகட்டுவான் வேண்டி, நாடார் பட்டம் புதியதல்லவென்பதை விளக்குகின்ற சிற்சில ஆதாரங்களை ஈண்டு எடுத்துக்காட்ட விரும்புகின்றனம்.

பண்டைக்கால இந்த தேச சரித்திரத்திற்குத் தற்போது ஆதாரங்கள் போதியவாறு கிடைக்கவில்லையென்பதும், சிற்சில கல்வெட்டுக்களே பிரதான ஆதாரமாக இருக்கின்றவென்பதும் சரித்திர ஆராய்ச்சிக்காரர் யாவரும் அறிந்த விஷயமே. தத்துவ சாத்திரங்களின் உண்மையையே ஆராய்ந்து பரலோக இன்பத்திற்காக வழிதேடிக் கொண்டிருக்கும் இந்தியர்களுக்கு, மேனாட்டார்களைப் போல் உலகப்போக்கை பற்றிய பழங்கால ஆதாரங்களைப் பத்திரப்படுத்தி வைப்பதில் சந்தோஷமும் ஊக்கமும் காட்டும் வழக்கம் கிடையாது. ஆகலின், மிகப் பழங்கால ஆதாரங்கள் சிறிதளவுதான் நமது கைக்கெட்டக்கூடும். இந்தியாவில் வசிக்கும் நாடார்களைப் பற்றிய ஆதாரங்களும் சொற்பமாகத்தான் அகப்படுமென்பது சொல்லாமலே விளங்கும். ஆதாரங்கள் தொகையில் சொற்பமாக இருந்தபோதிலும், நமக்கு வேண்டிய சமாசாரங்கள் யாவற்றையும் அவை தெளிவாகப் புகட்டுகின்றன. 'நாடார்' என்னும் ஜாதிப்பட்டம் பள்ளிகள் கூறுவதைப் போல் நேற்று வந்ததன்றென்றும், அப்பட்டத்தைத் தாங்கியுள்ளோர் முற்காலத்தில் மிக உயரிய நிலையில் இருந்தனரென்றும், நாடார்கள் அரசர் குலத்தவரெனவும் அவ்வாதாரங்கள் சந்தேகமறக் காட்டுகின்றன.

I. தென்னிந்தியாவின் சைவசமயத் தலைவரும் "லோக குரு" என அழைக்கப்பட்டவருமான சிரிங்கேரி மடத்து ஸ்ரீ சங்கராச்சாரியார் தமது சீடரான மைசூர் சமஸ்தானம், தாராபுரம் தாலுகா, குளஞ்சுவாடி கெற்கேசுர அக்கிரகாரம் ஸ்ரீ மடத்திலிருந்த சிவசுவாமி சாஸ்திரி அவர்களின் பௌத்திரரான சிவராமசுவாமி சாஸ்திரி அவர்களை சவுமியனு (கி. பி. 1789) நாடார்களுக்குக் குருவாய் நியமனம் செய்து, அவர்களுக்குக் கொடுத்த அதிகாரப் பத்திரமாகிய தாமிர சாஸனத்தில் நாடார்குல வளமையைப் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

"...பாண்டிய குலமாயும் சிவகோத்திர சம்பன்னராயும் பாண்டிய தேசத்தில் பிறந்தவாளாயும் க்ஷத்திரிய வம்ஸாளாயுமிருக்கிற நாடார்கள் குலம் சமஸ்த்ததுக்கும் குலகுருவாய் நெமுகஞ் செய்து..."

அச் சிரிங்கேரி மடத்துச் சார்பாய் அக்காலமுதல் இன்றுவரையும் நாடார்கள் வசிக்கும்

நகரங்களுக்கு வருடந்தோறும் குலகுரு எழுந்தருளி, நாடார்களுக்கு வேதசாஸ்திரங்கள் கற்றுக்கொடுத்து வருகிறார். தற்சமயம் பாகூர் என்னும் இடத்திலிருந்து அக் குலகுரு வருகிறார்.

II. சென்னை கவர்ன்மெண்டாரால் சிவகாசி நாட்டாண்மை ஸ்ரீமான் சுந்தர நாடார் அவர்களுக்கு கி. பி. 1831ல் கொடுக்கப்பட்ட துப்பாக்கி லைசென்ஸ் பின்வருமாறு இருக்கின்றது.

"To all whom is may Concern No 13 Permit the Bearer hereof Soondara Nadar-a Merchant Native of Seevagausee to pass from hence to Tinnevelly with a Gun and sword a Pike without molestation.

Madras Police Office 22 Feburary 1831	(Sd) J. Blackburns Superintendent of Police

நெ ௧௩ இந்த வழிச்சீட்டு கொண்டுவருகிற சிவகாசியில் பிறந்த சுந்தரநாடான் என்கிற வர்த்தகன் யிவடத்திலிருந்து திருநெல்வேலிக்குத் துப்பாக்கி ௧. கத்தி ௧. ஈட்டி ௧. யுடன் தடங்கலில்லாமல் போகிறதற்குத் திறவு கொடுக்கவும்.

௲௮௱௩௰௧௵ பெப்ரவரி௴ ௨௰௨௳
சென்னப்பட்டணம் போலீசு கச்சேரி

(ஒப்பம்) பிளாக்பர்ன்ஸ் போலீசு விசாரணைக்கர்த்தர்.

அந்த லைசென்ஸின் பிற்பாகத்தில், மேலே காட்டியவாறு தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்ட விஷயம் தெலுங்கிலும் இந்துஸ்தானத்திலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது.

III. 1017-வது ஆண்டு (கி. பி. 1842) பிலவ௵ பங்குனி௴ 16௳ சிவகாசி ஸ்ரீமான் பெ. காளிமுத்து நாடார் அவர்களும் ஸ்ரீமான் சி. மதுரைநாயக நாடார் அவர்களும் தங்கள் முன்னோர்கள் காலமுதல் கூட்டாக நடத்தி வந்த வியாபாரத்தை முடிவுசெய்த காலத்தில், மதுரைநாயக நாடார் அவர்கள் காளிமுத்து நாடார் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த 'கொண்டு விலை விஸ்திப் பத்திரத்தில்' பின்வருமாறு எழுதப்பெற்றிருக்கிறது.

"௲௰௭௵ பிலப௵ பங்குனி௴ 16௳ சிவகாசியிலிருக்கும் பெரியணநாடான் மகன் காளிமுத்துநாடானுக்கு ௸ யூரிலிருக்கும் சின்னதம்பி நாடான் மகன் மதுரைநாயக நாடான் கொண்டுவிலை விஷத்தி பத்திரம் யெழுதி கொடுத்தப்படி யென்னவென்றால் தன்னுடைய தகப்பனாருக்கு பிறகு பிரமாதி௵ கார்த்திகை௴ ௰௬௳ முதல பஞ்சு தாரு கொண்டு விலை வட்டி வாசி குடுக்கல் வாங்கல் லேவாதி வகைக்கு யிறுவகை பெரும் முதல் பெட்டி யென்னுடைய சிறிய தகப்பனாம் முத்து நாடானுக்கும் முதலுக்கும் பங்கு இருபது தன்னுடைய தமயன் சுந்தரலிங்க நாடானுக்கும் முதலுக்கும் பங்கு இருபது மாககொண்டு விந்து அவர்களுக்கு பிரகாலம் தனக்கும் யெனக்கும் ௸ பங்காக கொண்டு விந்து கடைலாபம் கணக்காக சாரபடிக்கி யெவிளம்பி௵ கார்த்திகை௴ ௨௰௬௳ வரைக்கும் பகுந்து கொண்டதில் யென் பந்துவளி நீக்கி யெனக்கு வரவேண்டியது வராகன் ௨௲௫௱௰௭ இ.........

IV. 980-வது ஆண்டில் (கி. பி. 1804) சிவகாசி விஸ்வநாத சுவாமி கோவில் அதிகாரிகள் அக்கோவிலின் மானிய நிலங்களிலொன்றான ஓர் தோட்டத்தை உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு சிவகாசி நாட்டாண்மை ஸ்ரீமான் ராம நாடார் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த ஓலைப் பத்திரம் பின் வருமாறிருக்கிறது.

"௯௱௮௰௵ ரக்தாக்ஷி௵ வைகாசி௴ ௨௰௬௳ சிவகாசி விசுவநாத சுவாமி கோவில் தலத்தார் நாட்டாண்மை ராம நாடானுக்கு அடையோலை எழுதி குடுத்தபடி அடையோலையாவது விசுவநாதசுவாமி கோவில் விளாபூசைக்கலை ஈசானமூலை புஞ்சை.........எழுதினது நாட்டுக்கணக்கு சங்கரமூர்த்தி."

இவைப்போன்ற பழையகாலப் பத்திரங்கள் நாடார்குல கனவான்களிடம் ஏராளமாக இருக்கின்றன. முற்காலத்தில் எழுதுவதற்குப் பெரும்பாலும் பனையோலையே உபயோகப்

படித்தப் பட்டமைபால், அப்பத்திரங்களுள் அநேகம் ஓலைப்பத்திரங்களாகவே இருக்கின்றன. நாம் எடுத்துக்கொண்ட காரியத்தை முடித்தற்கு மேற்காட்டிய பத்திரங்கள் போதுமானவை யாதலால், இதர தஸ்தாவேசுகளை இங்கு எடுத்தாளாது விட்டனம். நாடார்கள் 1858௵த்திற்குப் பின்புதான் பனையேறுந் தொழிலைவிட்டு வியாபாரம் முதலிய துறைகளிலிறங்கி, நாடார் என்னுமோர் புதியபட்டம் சூடினார்களென்று மதிமயங்கிப் பிதற்றும் அர்த்தனரீச......வின் கூற்று எவ்வளவு தூரம் உண்மையான தென்பதை இதை வாசிக்கும் நேயர்களே ஆராய்ந்தறிவார்களாக. மேற்காட்டிய பத்திரங்களைக் குலாபிமானத்துடன் கொடுத்து உதவி புரிந்த கனவான்களான, சிவகாசி முனிசிபல் கௌன்சிலர் ஸ்ரீமான் கா. கா. ரா. பெரியண்ண நாடார் அவர்களுக்கும் முனிசிபல் கௌன்சிலர் ஸ்ரீமான் நாட்டாண்மை நா. சு. ரா. ரா. ராம நாடார் அவர்களுக்கும், ஷையார் காரியம் ஸ்ரீமான் கா. ச. மு. தங்கப்ப நாடார் அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனம் செலுத்துகின்றேன்.

குறிப்பு:—இத்தகைய கேள்வி எழுதியதற்குக் காரணம் நமது அர்த்தனரீச நாய்கரும், அவரது குலத்தவர்களுள் சிலரும் தற்காலம் நவீனப்பட்டம் வைத்துக்கொண்டு ஆடுதலைப் போல்; நாமும் வைத்துக்கொண்டோ மென நினைத்துக் கேட்கத் துணிந்தனர். அஃது அறியாமையிலும் அறியாமையேயாம். நாய்கரின் தூண்டுதலைப்பால் கிருஷ்ணசாமி ஐயர் கேட்க, அவரைப் பின்பற்றி நாய்க்கருங் கேட்டுவிட்டார். இவரும் சேலத்திலுள்ளவர்களே! (பர்.)

சந்தியாவந்தன விதி.

(பிர்மவித்தியா.)

இனிச் சந்தியோபாசனத்தைப்பற்றிக் கூறுவாம். முன் வருணத்தவர் மூவருக்கும் பற்பல கன்மங்கள் விதிக்கப்பட்டிருப்பினும் அவற்றுள் சந்தியாவந்தன மென்னுங் கருமமே எல்லாவற்றிலுஞ் சிறப்புற்றது. "காலையில் நக்ஷத்திரங்கள் நன்றாகத் தோன்றும்பொழுதே விதிவழுவாது சந்தியவந்தனம் செய்தல் வேண்டும். சூரியமண்டலம் பாதி மறைந்திருக்கும் பொழுது மாலையில் சந்தியாவந்தனஞ் செய்தல் வேண்டும்" என்று சம்வர்த்தர் மொழிகின்றார். "காலையிற் செய்யும் சந்தியாவந்தனமாவது நக்ஷத்திரங்கள் புலப்படுங்கால் செய்யின் உத்தமமென்றும் அவை சிறிது மறைந்திருக்குங்கால் செய்தால் மத்திமமென்றும், சூரியனைக் கண்டபிறகு செய்தால் அதமமென்றும், ஆக மூவகைப்படும். மாலையிற் சந்தியாவந்தனம் சூரியன் புலப்படுங்கால் உத்தமமென்றும், சிற்சில நக்ஷத்திரங்கள் தோன்றுங்கால் மத்திமமென்றும், நக்ஷத்திரங்கள் முற்றிலும் வெளிப்படுங்கால் அதமமென்றும், ஆக மூவகைப்படு" மென்றும், வியாசாசாரியார் சாற்றுகின்றார். உதயத்திற்கு முன் இரண்டு நாழிகைகள் சந்தியாவந்தனத்திற்கு முக்கியகாலம். உதயத்திற்குப் பின் மூன்றே முக்கால் நாழிகை வரையில் மத்தியகாலம். அதுகொண்டே ஓர் ஸ்மிருதியில் "உதயத்திற்கு முன் இரண்டு நாழிகைகளும் பின் மூன்றே முக்கால் நாழிகைகளும் சந்தியாவந்தனத்திற்குக் கால" மென்று இருக்கின்றது. முக்கிய காலத்திற்குள் சந்தியை அநுஷ்டித்தல் வேண்டும். ஜல முதலியவை கிடைக்கா விடத்தில் அமுக்கிய காலத்திலுஞ் செய்யலாம். அவ்விதஞ் செய்யாதவர் பெரும் பாபத்திற்குள்ளாகி ஆந்தையாகப் பிறப்பர். காலையிற் செய்யும் சந்தியாவந்தனத்தால் இரவிற் செய்த பாபமும், மாலையிற் செய்த சந்தியாவந்தனத்தால் பகலிற் செய்த பாபங்களு மொழியும். "மந்தேகர்" என்னும் ஓர்வகை இராக்கதர்கள் சூரியனை எதிர்ப்பார்களென்றும், அவர்கள் அந்தணர்களளிக்கும் அர்க்கியத்தால் ஒழிவார்களென்றும் வேதங் கூறுகின்றது. இவ்வித மறிந்து

சந்தியாவந்தனத்தைச் செய்பவர் நீடூழி வாழ்ந்து பாபத்தை யொழித்துப் பரத்தி அடைபவர். யாக்ஞவல்கியர் தாம் எழுதிய யோககீதையில் "முற்கூறியபடி உண்மையை யறிந்து சந்தியாவந்தனத்தைச் செய்பவர் நீண்ட ஆயுளைப் பெற்றுப் பாபங்களை யொழிப்பர். ஆசௌச காலத்திலும் மந்திரங்களை மனத்தில் தியானித்துச் சந்தியாவந்தனத்தை முடித்தல் வேண்டும். முக்கிய காலத்திற் செய்யாமல் அதற்கு முன் செய்திருந்தால் மீண்டும் தக்ககாலத்தில் செய்ய வேண்டும். அக்காலத்தில் செய்ததும் செய்யப் படாததும் ஒன்றே. முக்கிய காலத்திற் செய்யத் தவறினால் பிரயாச்சித்தஞ் செய்யவேண்டுமென்று சங்கிரக்காரர் கூறுகின்றார். "ஆசமனீயஞ் செய்து விதிவழுவாது பிராணனை யொடுக்கி நான்காவது அர்க்கியத்தைக் கொடுத்தால் அதனால் அக்காலங் கடந்து செய்தது நீங்கும்" என்று சம்வர்த்தர் என்பவர் "அர்க்கியப் பிரதான காலந் தவறினால் எண்ணூறு காயத்திரி ஜபஞ் செய்தல் வேண்டு" மென்றார்.

கௌணகாலமுங் கடந்தால் எண்ணாயிரம் காயத்திரி ஜபம் செய்தல் வேண்டும். இடங்கள் மாறுதலால் பலமும் வேற்றுமைப் படுமென வியாசர் கூறுகின்றார். "வீட்டில் ஒருமடங்கும் கோஷ்டிகளில் பதின்மடங்கும் நதிக்கரையில் நூறுயிர மடங்கும், கடவுள் சந்நதியில் அளவிலாப் பயனைத் தருவது மாகும்" என்றார்.

சந்தியாவந்தனஞ் செய்யும் முறை.

ஆசமனீயஞ் செய்தல் வேண்டும் "ஆபோ" என்று தொடங்கிய மந்திரத்தில் ஒவ்வோரடியின் இறுதியில் ஒவ்வொருமுறை தவறாது ஒன்பது முறை புரோக்ஷணஞ் செய்துகொள்ளல் வேண்டும். அஃதைக் குறைக்கவும் மிகுதியாக்கவும் கூடாது. ஒவ்வொரு அடியிலும் பிரணவத்தைச் சேர்த்துப் புரோக்ஷணஞ் செய்யின் அதனால் ஒரு வருடத்திற்குள் செய்த பாபம் நீங்குமெனச் சௌனகர் சொல்லுகின்றார். தண்ணீரை ஒழுகவிடாது புரோக்ஷணஞ் செய்துகொள்ளல் வேண்டும். அங்ஙனஞ் செய்யும் ஒவ்வொரு திவலைகளும் நிலத்தில் விழாது சிரசிற்றானே தங்கும்படி செய்துகொள்ளல் வேண்டும். பிறகு "சூரிய, ஆப, அக்னி" என்று தொடங்கும் மந்திரங்களால் முறையே காலை, பகல், மாலைகளில் மந்திரித்த தண்ணீரை யுட்கொள்ளல் வேண்டும். உடனே "ததி" என்று தொடங்கும் மந்திரங்களால் (ஒவ்வொரு அடியின் இறுதியில் நிறுத்தி உச்சரித்துப்) பதின்மூன்று முறை புரோக்ஷணஞ் செய்துகொள்ளல் வேண்டும். உடனே இருகைகளால் தண்ணீரெடுத்துக் காலையிலும் பகலிலும் எழுந்தும், மாலையிலுட்கார்ந்தும் காயத்திரி மகா மந்திரத்தால் மந்திரித்துச் சூரியனை நோக்கி அர்க்கியத்தைக் கொடுக்கவேண்டும். "ஸ்மிருதி சங்கிரகத்தில் தண்ணீருள்ள விடத்திற் சென்று ஓர் மாட்டின் கொம்பளவு உயர்த்தி எடுத்துத் தண்ணீரிற்றானே அஃதை விடவேண்டும்" என்றிருக்கின்றது. சுட்டுவிரலும் பெருவிரலும் ஒன்றுடனொன்று சேராம லிருக்கவேண்டும். சேர்ந்தால் அஃதை இராக்ஷச முத்திரை என்பார்கள். மீண்டும் பிரணவத்தையும் வியாகிருதிகளையும் உச்சரித்துப் பிரதக்ஷணஞ் செய்தல் வேண்டும். இதனால் மந்தேகர் என்பவர்களுக்குச் செய்த தீங்கினால் உண்டான கெடுதி ஒழியுமென்று வேதங் கூறுகின்றன. உடனே ஆசமனஞ் செய்தல் வேண்டும். "யாக்ஞவல்கியர்" என்னும் முனிவர் "வெளிப்புலன்களை யடக்கி உட்புலன்களை யொடுக்கி உள்ளத்திற் செலுத்திய ஸ்படிகமணிபோன்ற நின்மலமாய் தமது புத்தியில் பிரதி பிம்பித்த ஆத்தும சுவரூபத்தை உபாதியை விட்டகற்றிச் சச்சிதானந்தப் பிரம்ம மயமாக நின்று அதுவே தானாய் வேற்றுமையற்றுச் சிறிதுகாலம் தியானிக்கவேண்டும்" என்று சொல்லுகின்றார். சந்தியாகாலத்திற் தண்ணீர் கிடைக்காவிடில் தன்கையினால் புழுதிமண்ணையாவது எடுத்து மூன்று அர்க்கியங்கள் கொடுத்தல் வேண்டும். அதுவுங் கிட்டாவிடத்துச் சூரியனைத் தியானித்தல் வேண்டும். பிறகு சூரியாதி நவக்கிரகங்களையும் கேசவாதிகளையும் உத்தேசித்துத் தர்ப்பணஞ் செய்தல் வேண்டும். சந்தியாவந்தனத்தில் அர்க்கியம் கொடுத்தலே மிகச் சிலாக்கியம். புரோக்ஷண முதலிய மற்றவை எல்லாம் சுசுதிக்குக் காரண

மான அங்கங்கள். தண்ணீரைக் கையிலெடுத்து அத்துடன் பிரதக்ஷணஞ் செய்தலும் பிராணுபாமஞ் செய்தலும் குற்றத்தை யகற்றிக்கொள்ளும் பொருட்டே. பிறகு "இவ் வாதத்தின் பிரமம்" என்னும் மந்திரத்தை உச்சரித்துத் தன்னைச் சுட்டிப் பிரதக்ஷணஞ் செய்தலும், பாபம் விலக்கும் பொருட்டும் அஸ்திரம் திரும்பவும், உடனே ஆசமனீயஞ் செய்து ஜபம் செய்யும் இடத்திற் கேகவேண்டும். "சங்கர" என்பவர் ஜபத்திற்கு வேண்டிய விடங்களைப் பற்றிக் கூறியிருக்கின்றார். "வீட்டில் ஒருபங்கும் நதிக்கரையில் இருபங்கும் பசுக்களடிப்பட்ட விடத்தில் பத்துப்பங்கும், அக்கினி கிரகங்களில் நூறுபங்கும், உத்தம க்ஷேத்திரங்களிலும், தீர்த்தங்களிலும், தேவதா சந்நிதிகளிலும் ஆயிரம் பங்கும், ஈசுவர சந்நிதியில் அனந்தமாய் அம் மந்திரங்கள் பயன்படுவன" வென்பன. அவரது திருவாக்கு ஜபஞ்செய்தல் எப்பொழுதும் அடக்கமாகவே யிருக்கவேண்டும். அதுவே அதிகப் பயன்படுமெனப் பெரியோர் கருத்து. தர்ப்பை, கிருஷ்ணாஜினம், வஸ்திரம் இவற்றால் முறையே செய்துகொள்ளல் வேண்டும். பவித்திரம் அகப்படாவிடில் பூணூலைப் பவித்திர விரலில் தரிக்கவேண்டுமென்பது வைகானசர் கருத்து. "பிரமலோகம் வரையில்" என்றத் தொடக்கத்தின் மந்திரத்தால் தேவதைகளையும் அந்தணர்களையும் நமஸ்கரித்தல் வேண்டும். "பூதங்களொழிக" என்னும் மந்திரத்தால் பூமியைச் சுத்திசெய்து தனது இடதுகாலால் மும்முறை இடத்தைத் தட்டி யுட்காரல்வேண்டும். முழங்கால், துடை இவைகளுக்கு இடையில் உள்ளங்காலைப் புகாவிட்டுச் சமாதியுடன் பிரணவ முதலிய மந்திரங்களால் கரசுத்தி தாளத்திரயம் திக்பந்தன முதலியவை செய்து குரு முதலியவரை நமஸ்கரித்துப் பூதசுத்தி செய்துகொள்ளல் வேண்டும். பிறகு பிராணயாமம் செய்தல் வேண்டும். பெருவிரல் சுண்டுவிரல் பவித்திரவிரல் இவைகளால் மூக்கைப் பிடித்துச் சுவாசத்தை யொடுக்கி வியாகிருதி, காயத்திரி, சிரசுகளை மனதால் மூன்றுமுறை யுச்சரிக்கவேண்டும். பிராணவாயுவைத் தகைத்துகொள்ள ஆற்றலற்றவன் அதே மந்திரத்தைப் பதின்முறை ஜபித்தல் வேண்டும். ஒவ்வொரு மந்திரத்தின் ரிஷி, சந்தம் தேவதை இவைகளை முறையே தலை, முகம், மார்பு இவ்விடங்களில் சுட்டிச் செபித்தல்வேண்டும். "மந்திர தேவதாப் பிரகாசிகை" என்னும் புத்தகத்தில் பிரணவ தேவதாத்தியானத்தில் "திவ்வியரூப திவ்வியாபரண திவ்வியாயுதங்களணிந்த ஸ்ரீமந்நாராயணனது திருமேனி எடுத்துக் குறிப்பிட்டிருக்கின்றது. இனி வியாகிருதிகளுக்கும் காயத்திரிக்கும் முன்போல் ரிஷி, சந்திரன், தேவதைகளைத் தியானித்தல் வேண்டும். ஸ்ரீகாயத்திரி தேவதையின் திவ்விய ரூபம் மந்திர சாஸ்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. "முத்துப்பவளம், பொன், நீலம், வெண்மை இந்நிறங்கள் பொருந்தியதும் முக்கண் பெற்றதுமான முகங்களுடனும் தலையில் திங்கட்கலை அலங்கச் சர்வதத்துவமயமாய் நின்ற திருமேனியும், வரம், அபயம், அங்குசம், கசை, கபாலம், கயிறு, சங்குசக்கிரம், இரு தாமரை மலர்கள் இவைகளைக் கையிலணிந்துமுள்ளான்" என்று சிரச் என்னும் மந்திரத்திற்கு ரிஷி. ப்ரம்மா என்றும், சந்தம், யஜுர் என்றும், பிரமன், அக்கினி, வாயு, சூரியன் இவர்கள் தேவர்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. பிராணுயாமத்தால் பாபங்களெல்லாம் தொலையு மென்பது ஆன்றோர் கொள்கை. காயத்திரி ஆவாகனமந்திரத்திற்கும் ரிஷி, சந்தம், தேவதைகள் இவர்களைத் தியானித்துக் காயத்திரியை ஆவாகனஞ் செய்தல் வேண்டும். யோகயாக்ஞ வல்கியத்தில் "பாக்கன், விஷ்ணு, புருஷன் என்னும் பெயர்களை வகித்தவனும் சத்தியரூபனும் உருவற்ற கடவுளைத் தியானித்து முத்தி பெறுவான்" என்றிருக்கின்றது. மாலையால் அல்லது பவித்திர விரலில் நடுப்பருவமுதல் சுட்டுவிரல் அடிப்பருவம் வரையிலாவது எண்ணி வரவேண்டும். காயத்திரி ஜபித்தலில் இவ்விதக் மனனம் மிகச்சிறப்புடைத்து. 1008, 108, 28 ஆவது ஜபிக்க வேண்டும். பத்துமுறை ஜபித்தல் சர்வாதமமென வேதங் கூறுகின்றது. ஜபத்தின் இடை

யில் சூத்திரர், பதிதர், மாதவிடாய் காலத்திலுள்ள மாதர்கள் நீச்சர்கள் பன்றி இவைகளைக் கண்டால் தண்ணீரைத் தொடவேண்டும். இவைகளுடன் பேச நேர்ந்தால் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். வீண் வம்பில்லாது ஜபத்தை முடித்தல் வேண்டும்." "எவ்விதத்திலாவது தர்மத்தில் குறைவுண்டானால் கடவுளை நினைப்பதால் அஃது குற்றமற்றதாகு" மென்று பிரஜாபதி கூறுகின்றார்.

———(o)———

வித்தியாபிவிருத்தி சங்கம், கமுதி.

நியு பில்டிங் பண்டு.

கமுதி நாடார் குலாபிமானிகளுக்கோர் வேண்டுகோள்.

கனவான்களே!

நமது குலத்தவர்களின் மேன்மைக்கென்றும் வித்தியாபி விருத்திக்கென்றும் பொது நலங் கருதி ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இவ் வித்தியாபிவிருத்தி சங்கத்திற்கு தனது கட்டடம் இல்லாதகுறை தங்களுக்கு தெரிந்ததே. தனது கட்டடம் வாங்குவதற்கு இது வரை சந்தா மூலமாகவும் நன்கொடை மூலமாகவும் வசூலாகி இருப்பதில் செலவு நீக்கி இருப்பு போக மேற்கொண்டு ரூ 4000 வரை வேண்டியதிருக்கிறது. அதற்காக டிக்கட்டுகள் ஏற்படுத்தி விற்பனை செய்துவருகிறோம். தாங்கள் இது வரை சங்கத்தின் அபிவிருத்தியைக் கருதி வந்தது போல் இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கும் இப் பெருங்காரியம் நிறைவேறும் பொருட்டு ஒவ்வொருவர்களும் ஒரு வாரம் வேலையை நமது சங்கத்திற்காக செலவு செய்வதென்று நிர்மானித்து டிக்கட்டுகளை கிராமங்கள் தோறும் சென்று சங்காபிமானிகளிடம் விற்பனை செய்தும் தாங்கள் ஒவ்வொருவர்களும் அவரவர்களுக்கு வேண்டிய டிக்கட்டுகளை தனதாருக்கு எழுதியும் தொகையை சேகரம் செய்து இப் பெருங்காரியத்தை நிறைவேற்றி கட்டடத்தை முடித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ரெங்கோனிலும் மற்றும் ஊர்களிலுமுள்ள நமது நாடார் குலாபிமானிகள் விசேஷ சிரத்தை எடுத்து இவ்விடமிருந்து அனுப்பியிருக்கும் டிக்கட்டுபுஸ்தகங்களை விற்பனை செய்தனுப்பி மேற்கொண்டு ஏராளமான டிக்கட்டுகளை தருவித்து விற்பனை செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சங்கத்திற்கென்று தனது கட்டடம் கட்டி வைத்துவிட்டால் நமது பின் சந்ததியார்கள் கஷ்டமின்றி சங்கத்தினால் கல்விஅபிவிருத்தி அடைந்து நமது ஜன சமூகத்துக்கு வேண்டிய ஏதுக்களை செய்ய ஏதுவாக இருக்கும். கட்டடமும் நிலைகந்து விட்டது. ஆகலால் தாங்கள் பரிபூரண கிருபை செய்து டிக்கட்டுகளை விற்பனை செய்து இப் பெருங்காரியத்தை நிறைவேற்றி கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். தாங்கள் நமது சங்கத்தின் அங்கத்தினராகாதிருந்தால் தாங்களும் ஒரு அங்கத்தினராகச் சேர்ந்து நமது சங்காபிவிருத்திக்காக உழைத்து வருவதுடன் சங்க நடவடிக்கைகளையும் கவனித்து வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

P. S. பாண்டியன்,
காரியதரிசி.

*

☞ * ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம். *

தபால் சார்ஜ் உள்பட ரூபா 1—8—0.

கேள்விக்கு சமாதானமும், அதற்குமேல் கேள்வியும்.

(முன்றொடர்ச்சி.)

சென்றமாதம் சேலம், S. கிருஷ்ணசாமி ஐயர் கேட்டனுப்பிய முதற்கேள்வியை முடித்தனம். இம்மாதம் அவரது இரண்டாவது கேள்வியையும், சேலம், அர்த்தநாரீச நாயகரின் 12-வது கேள்வியும் ஒருபொருள்கொண்டது. அஃது வருமாறு:—

(ஐயர் கேள்வி.) உங்கள் மரபைச் சாணார் என்பதும்; சாணான் கள்ளிறக்குவோன் எனத் தமிழ்நாட்டில் தொழிற் பாரம்பரையில் மற்ற தொழிலாளர்களைப் போல் உங்களை உலகம் சொல்லுவது எப்படி மறந்துவிடும்.

(நாய்கர் கேள்வி.) உங்களுக்கு ஜாதித் தொழில் கள்ளிறக்கி விற்பதல்லவென்றால் வேறு என்ன?

The Shanars were, from time immemorial, engaged in the cultivation of palmyra palms and in the manufacture of intoxicating liquors, அதாவது சாணார்கள் நினைக்கமுடியாத காலந்தொட்டு பனந்தோப்புகள் பயிர் செய்து போதை தரும் கள் முதலியவற்றை உற்பத்தி செய்வதில் பழக்கப்பட்டவர்கள் என்று சென்னை சரித்திரங்களிலும் 'தென்னிந்தியா ஜாதிகளும் மரபுகளும்' என்னும் புத்தகத்திலும் எழுதியிருப்பதற்கு என்ன பதில் சொல்லுகின்றீர்? எனக் கேட்டுள்ளார்.

எமது சமாதானம் வருமாறு.

எங்களில் சிலர் கள்தொழிலை சிலகாலமாக செய்து வருவதால் "சாணான் கள்ளிறக்குவோன்" என இத் தமிழ்நாட்டில் இக்காலத்தில் ஏற்பட்ட சிற்சில சில்லரைச் சுவடிகளில் வழங்கிவர நேர்ந்தது. அவை ஒரு பிரமாணமாகக் கொள்ளப்பட்டது. கள்தொழில் எங்களுக்குரிய பூர்வ குலத்தொழிலாயிருப்பின் எங்கள் சாதிப்பெயர்களில் கள்சப்தம் விளங்க வேண்டும். அதுவுங்கிடையாது. அல்லது பூர்வ நூல்களிலாவது கள்தொழில் சான்றார் அல்லது சாணானுக்குரிய தொழிலெனக் கூறப்பட்டிருத்தல் வேண்டும். அதுவும் கிடையாது. அப்படியிருக்க சாணார்களுக்கு கள்தொழில் பூர்வதொழி (time immemorial) லென ஒரு துரை கூறிவிட்டதாக பூச்சிக்காட்டுவதால் பயனென்னை? அத்துரையையும் இன்னவர் எனக் குறிப்பிடாது "தென்னிந்தியா ஜாதிகளும், மரபுகளும்" என்னும் புத்தகப்பெயரை மாத்திரம் பிரஸ்தாபித்தலால் (Thurston) தர்ஸ்டன் துரை என வறியலாகும். அத் தர்ஸ்டன் துரையே ("In the inscriptions of Rajaraja Chola A: D. 984—1013, tobdy-drawers are refered to as Iluvas." Vide, Castes and Tribes of Southern India, Vol. VI, P. 368.) "இராஜராஜ சோழன் காலத்தில் கள்விலைஞர் ஈழுவர் என சாதிப் பெயர் பெற்றிருந்ததாகக் கூறியுள்ளார். அப்படிக் கூறிய அவர் (Immemorial) நினைக்கமுடியாத காலத்திலிருந்து" எனக் கூறினரெனக் கூறின் பொருந்துமோ? ஒன்றுக்கொன்று முரணேற்படாதா? அவர் தம்கவனத்திற்கு எட்டவில்லை எனக் கூறினர்போலும். அப்படியாவது ஈழுவரும் சாணாரும் ஏககுலத்தவர் எனவாவது தர்ஸ்டன் துரை அவர்கள் கூறியுள்ளாராவென வாராயின் (refer Thurston's Castes and Tribes of Southern India, Vol. II, P. 392 to 418. under the heading of Izhava.) அதுவுங்கிடையாது. அப்படியிருக்க (Immemorial) இம்மேமோரியல் என்பதற்குப் பொருளில்லையே!

மருவு மொழியாகிய சாணார் என்பதற்கு மூலமொழியாகிய சான்றார் என்பது A. D. 1070-ம் வருடத்தில் ஏற்பட்ட பெரியபுராண காலத்தில் எங்கள் சாதிக்குரிய சாதிப்பெயரென கூறப்பட்டுள்ளது. அக் காலத்திற்குப் பிறகே அதாவது 12-ம் நூற்றாண்டிற்குப் பிறகே பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டுகள் ஏற்பட்டன. சான்றார் என்பது கள்விலைஞருக்குரிய சாதிப்பெயராயிருப்பின் அந் நிகண்டுகள் "பழையர் துவசர்" என்னும் பெயர்க

ளோடு சான்றார் என்பதும் ஒன்றெனக் கூறியிருப்பார்கள். அப்படியும் இல்லாமையால் தற்காலம் எங்களில் சிலர் அத்தொழிலை புரிந்து வருவதால் அதை முன்னிட்டு தவராகவெழுதி வருகிறார்களென வறியவும். அதோடு சங்க நூற்களிலும் கம்ப ராமாயணத்திலும், மற்ற நூற்களிலும் கள்விலைஞரை பழையர் எனக் கூறப்பட்டுள்ளதே யன்றி, சான்றார் எனக் கூறப்பட்டில்லை யென வறியவும்.

(இன்னும் வரும்.), பத்திராதிபர்.

கல்கத்தா விர்த்தாந்தம்.

வங்காளிகளின் விசித்திர சரித்திரம்.

(ஓர் அந்தணர்.)

ஐயா! வங்காளநாட்டிற் குடிகொண்ட எல்லோரும் பல நூல்களைப் படிப்பதிலும் பற்பல நூல்களை இயற்றுவதிலும் பேராற்றல் பெற்றவர்களே அவர்கள் சம்ஸ்கிருத பாஷையைக் கற்பதற்கு முன் முக்தபோதம், சாரஸ்வதம், கலாபகம், சுபத்வம், சாந்திரம் முதலிய சில இலக்கணங்களைப் படித்துப் பின்னர்ச் சில இலக்கியங்களையுங் கேட்டு மற்றவர்க்குப் படிப்பிக்க முயலுகின்றார்கள். இவ்வழி மிகச் சிலாகிக்கத் தக்கதே. இவர்களுட் பெரும்பான்மையோர் தர்க்கசாஸ்திரங் கற்றவரும் கர்மசாஸ்திரப் பயிற்சியுள்ளவருமே. ஆயினும் விசேஷமாக இவர்கள் வேதப்பயிற்சி செய்வதில்லை. பூர்வமீமாஞ்சை உத்தரமீமாஞ்சைகளைப் பயின்றவர் மிகச்சிலரே. வேத சிரவாசிகளான சிஷ்டர்கள் கொண்ட மார்க்கத்தில் இவர்கள் அநேகர் செல்வதில்லை. அவர்களது வார்த்தை அநேகமாய் வடமொழிக் கலப்புள்ளதாயும் மெல்லோசை பொருந்தியதாயு மிருக்கின்றது. அவ்விதமிருந்தும் அச்சொற்களை இவர்கள் முற்றிலும் உச்சரியாது அரைச் சொற்களாயும் வழுச் சொற்களாயும் உச்சரிப்பதால் அதின் மேன்மை குலைந்து உட்சிதைந்து அநேகமாய் வேறு பாஷைபோல் தோன்றும் நிலைமையைப் பெறுகின்றது. அவர்கள் ஷ என்னும் எழுத்தை ஸ-என்றும் வ. என்பதை ப. என்றும் உச்சரிப்பார்கள். இவர்களின் விசித்திர சரித்திரத்தைப் பற்றி எழுதவேண்டியது அநேக மிருப்பினும் இவ்விடத்தில் சிறிதே எழுதப்போகிறேம் இவ்விடத்திலுள்ள ஜனங்கள் அநேகர் சாக்தமதஸ்தர்கள். சிலர் வைஷ்ணவர்களென்றும் பிராமர்களென்றும் இருவகை வேற்றுமை பெற்றிருக்கின்றார்கள். வைஷ்ணவர்களோ நாராயணனை வழிபடுதலும் அதற்கெனத் துளசிக் கட்டைகளால் மாலைகள் பூண்டலும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். சிலர்பட்டில் கையில் ஜபமாலைகளைக் கொண்டு திருநாமப் பெயர்களைச் செபித்து வருகின்றார்கள் பிராமர் என்பவர்களோ பிரமம் என்னும் ஓர் பொருள் ஏதோ இத்தன்மைத்தெனத் துணியப்படா நிலைமையி லிருப்பதாயும் அதனையே நாம் வழிபடவேண்டு மென்றும் அதுவே மேலான கொள்கையென்றும் அதுவே அக்கடவுளை உலகப் பொருளனைத்துமா யிருப்பதாயுஞ் சொல்லித் திரிகின்றார்கள். அவர்களுள் மங்கையர்க்கும் மக்கட்கும் வேற்றுமை சிறிதுமில்லாது வெகு சாதாரணமாய் ஒருவர்க்கொருவர் கலக்கிறார்கள். அம் மதத்திற் புகுந்தவர்கள் சாதி வேற்றுமை பாராட்டுவதில்லை. அவர்களுக்கு விவாகம் முதலியவை தம் இச்சையின்படியே நடக்கின்றன. பதினெட்டு [illegible]ன் மேற்பட்ட ஸ்திரிகளுக்கே விவாகம் நடத்துவார்கள். அவர்களுக்குக் கல்விப்பயிற்சி அதிகமாதலால் அவர்களிற் பெரும்பான்மையோர் தமக்கு இயைந்த மணவாளனையே பெறுகின்றார்கள். அதிகமாக எழுதுவதிற் பிரயோசனம் யாதுமில்லை. அதைக் கைக்கொண்ட நடைகளெல்லாம் அநேகமாய் ஐரோப்பிய நடைகளே. வைஷ்ணவர்களோ அங்ஙனஞ் செய்வதில்லை. அவர்கள் சிறு குழந்தைகளைத்தான் விவாகஞ் செய்கின்றார்கள். இதன்மேல் விரிவஞ்சி விடுக்கின்றேன். (ரூப. அமெரிக்கா ஐரோப்பா முதலிய தீவாந்

தரயாத்திரைகளைச் செய்து திரும்பி இவ்விடம் வந்து அதனால் சாதிவிட்டு விலகினவர்களுக்கு இம்மதமே கெதியாயிருக்கின்றது. அவ்விதமாயுள்ளவர்கள் கைக்கொண்ட நடைகளோ மிக வியக்கத்தக்கன. அவைகளை எழுத எமக்கு மிகுந்த வெட்கமாயிருக்கின்றது. வங்கதேசத்தவர்க்குத் தீவாந்தரஞ் செல்லலென்பது தென்னாட்டவர் அயல் கிராமங்களுக்குச் செல்வதுபோலவே. இனி இத்தேசத்திற் சக்தி மதத்தவர் அதிகமாதலால் அவர்களைப் பற்றியே சிறிது எழுதுவாம். இவர்களிற் பெரும்பான்மையோர் கரியநிறமுள்ளவர்கள். சிறுபான்மையோர் வெண்ணிறம் பெற்றவர்கள். இவர்கள் கடுகெண்ணெயை உட்கொள்ளுவதாலும் மேற்பூசுவதாலும் இவ்விதமான நிறம் இவர்களுக்குண்டாவதாக எண்ணப்படுகின்றது. அநேக மாசத் தலைமயிர்களைக் கத்தரித்தும் தாடிமயிர்களை வளர்த்தும் வருகின்றார்கள். இவர்களுக்குக் குடுமி இருப்பதில்லை. இவர்களுள் கிராமங்களுள் குடிகொண்டு பிராமணரெனப் பெயர் கொண்டு ஆஸ்திகரென்றும் தாம் தர்மத்தைச் செய்கின்றவ ரென்றும் ஆன்றோர் வழக்கத்தைக் கைக்கொண்டவ ரென்றும் எண்ணித் திரிகின்ற சிலர் ஓர்வகையாய்த் தலைகளைக் கத்தரித்து அகவாடியில் தேங்காய்க் குடுமி போன்ற சில குடுமிகளையும் வைத்திருக்கிறார்கள். அவர்களுள் எவரும் சூரியோதயத்தின் முன் நித்திரை விட்டெழும் வழக்கமில்லை. சிலர் உதயாதி ஐந்தாறு நாழிகைக்குமேல் தாம் சரீரத்தில் எண்ணெயிட்டுக்கொண்டு கங்காநதியிற் கழுத்தளவு சலத்தில் இறங்கி மற்றவர் தொடக்காலும் வெட்கமடையத்தக்க ஓர் சிறு துணியை யெடுத்து அதன் நான்கு மூலைகளையும் கையாற்பிடித்துத் தண்ணீர் மொண்டு வடிகட்டித் தலையில் விட்டுக்கொள்வார்கள். கங்கையிலுள்ள தண்ணீரோ மிகத் தெளிந்ததும் நிர்மலமாயும் இருக்க அதை இவ்விதம் செய்வது யாதுகாரணம் பற்றியோ அறியேம். ஓர் கலத்தும் தலையைத் தண்ணீரில் அமிழ்த்துவதேயில்லை. இது பெண்களுக்கும் புருஷர்களுக்கும் சாதாரணம். ஆயின் பெண்களிடத்தில் ஓர் விசேஷம் உண்டு. அதாவது பெண்கள் தண்ணீரில் நீராடுங்கால் "தண்ணீரில் உடையின்றி முழுகலாகாது; மலசலங் கழித்தலாகாது; காறியுமிழலாகாது" என்னும் வேதத்தின் ஆணையையும் மீறிச் செல்லுகின்றார்கள். இதன்மேல் இதை விரித்தெழுதுவதில் நமக்கே வெட்கமாயிருத்தலால் இம்மட்டில் இதை விட்டுவிடுகின்றோம். பிராமணரென்னுஞ் சிலர் ஸ்நானகாலத்தில் யந்திரசகாயங்களால் முறுக்கப்பட்ட தமது பூணூலை எடுத்துப் பூவந்தி சவுக்காரம் முதலியவற்றோடு கலந்து தேய்த்து வெண்மையாக்கி அதை உலர்த்தி எடுத்து மறுபடியும் தரிக்கிறார்கள். வண்ணான் தோய்த்துலர்த்திய உடைகளை உடுத்து உடனே கங்கையின் மண்ணை நெற்றியில் சிறிது தரித்து நித்திய கர்மஞ் சிறிது செய்கிறார்கள். உதட்டையும் சற்று அசைக்கின்றார்கள். தென்னாட்டவர்களில் அவரவர் உடைகளாலும் நடைகளாலும் சாதிவேற்றுமைகளை அறிவதுபோல இத்தேசத்தில் அறிந்து கொள்ள முடியாது. எல்லோரும் முக்கச்சம் தரிப்பதே வழக்கம். பெண்கள் உடையைப் பற்றி நமக்கு எழுத இஷ்டமில்லையாயினும் எழுதத் தொடங்கினோமே; பின் விடலாகாதென்று சிறிது எழுதுகின்றோம். பத்துமுழ நீளமுள்ளதும் மெல்லியதும் ஓரங்குலம் கறுப்பு அல்லது சிவப்புக் குறியுள்ளதும் வெண்ணிறமானதுமான வஸ்திரத்தையே தரிக்கின்றார்கள். முற்றிலும் உடம்பைச் சுற்றித் தலையையும் மூடிக் கொள்கின்றார்கள். பெண்கள் கச்சந்தரித்தல் அத்தேசத்தில் வழக்கமில்லை. அவர்கள் அவசியமாய் மறைக்கவேண்டிய அங்கங்களில் குப்பாயம் முதலியவற்றைத் தரிக்காமல் தலையை மூடிக்கொள்வதால் மட்டில் தமது மானத்தைக் காப்பாற்றிக் கொண்டதாய் எண்ணுகின்றார்கள். இத்தேசத்தவர் பெரும்பாலும் அறிஞர்களாயிருந்தும் இவர் பெண்கள் மறைக்கக்கூடாத இடத்தை மறைத்தும் மறைக்க வேண்டிய இடத்தைத் திறந்தும் இருப்பதைக் கவனியாதிருத்தல் யாதுபற்றியோ! அவர்கள் கையிற் கங்கணங்களையும் இடுப்பில் அரைஞாண்களையும் கால்களில் வெள்ளி வளைகளை

யும் தரிக்கின்றார்கள். அவர்கள் நெற்றியிலும் கண்டத்திலும் சுமங்கலிகளென்னும் அடையாளங்காண ஒன்றும் தரிப்பதில்லை. காதுகளில் பல துவாரங்களிட்டு அவைகளில் பொன்கம்பிகளை மாட்டி வைத்திருக்கின்றார்கள். இவர்கள் தலைமயிர் பின்னலிடுவது ஏறக்குறைய அங்கிலேய மாதரைப்போலிருக்கின்றது. ஸ்நானஞ் செய்து சந்திபாவந்தனம் முடிப்பதன் முன்னர் சிறிது புகையிலைப்புகை உக்காவில் வைத்துப் பிடிக்கின்றார்கள். மற்றைய கீழ் வருணத்தவர் எவ்வித குழலை உபயோகிக்கின்றார்களோ அதைக்கொண்டே மேல் வருணத்தவரும் உபயோகித்து வருகின்றார்கள். அவர்களைக் கேட்டால் எச்சிலென்பது எப்பொருளென்றும் வினவுகின்றார்கள். இத்தேசத்தில் புகைப்பிடிப்பது எங்கும் உள்ளது, எவராலும் அதட்டிக் கத்தக்கது, என்றும் உள்ளது. மற்று இதைக் குறித்து விசேஷித்துச் சொல்லவேண்டியதில்லை. அவர்கள் விசேஷமாய் மீன் முதலிய வஸ்துக்களைத் தின்றும் தேக திடன்றவர்களாயே யிருக்கின்றார்கள். ஆதலாற்றான் இத்தேசத்தில் ஒருவனேனும் போலீஸ் சேவகனாயாவது போர்ச்சேவகனாயாவது ஆவதில்லை. அது மட்டோ அவ்விதம் செய்பக்கூடாதென்னும் ஓர் ஆக்ஞை யிருக்கின்றது. இவர்கள் நிணம் மச்சத்தையே உட்கொண்டபோதிலும் மற்றை அசம் முதலியவற்றை உண்பதில்லை. ஓர் சமயம் சக்தி தேவதைக்குப் பலிகொடுத்த அசம் முதலியவற்றை அது மிகப் புண்ணியமென்று உட்கொள்வார்கள். மண் முதலியவற்றால் செய்யப்பட்டும் கறுப்புச்சிவப்பு முதலிய நிறங்கள் உள்ள காளி துர்க்கை முதலிய பிரதிமைகளைச் செய்ய ஐஞ்ஞூறு ஆயிரம் என்னும் தொகையுள்ள பொருள்களைச் செலவழிக்கின்றார்கள். பின் இரண்டு மூன்று தினம் வரையில் ஆடல் பாடல் முதலிய விஷயங்களில் வெகுவாய்த் தத்தம் இயல்புக்குத் தக்க பொருள் செலவழிப்பார்கள், அக்காலத்தில் எண்ணிறந்த அஜங்கள் யமலோகப் பிராப்தி யெய்தும். அக்காலத்திற்றான் அளவற்ற மதுக்களைப் பானம் பண்ணுவார்கள். அக்காலத்துத் திருக்கோலத்தை எழுத இதற்கு இடமில்லை. இவர்கள் செய்துகொள்ளும் விவாக முறைமையைப்பற்றி எழுத இங்கு இடம் பெரிதில்லாமற் போனபோதிலும் ஓர் சிறிது எழுதுவாம். இத்தேசத்து உத்தமகுலத்திற் பிறந்த பிராமணரென்பார் நால்வகைப்பகுப்பினர்கள் அவர்கள் முக்கியோபாத்தியாயர் வந்தியோபாத்தியாயர் கெங்கோபாத்தியாயர் சிரேஷ்டோபாத்தியாயர் என்று சொல்லப்படுவர். இவ்விதமாய் முற்காலத்து வழக்கம். இப்பொழுதோ முகர்ஜி, வாணிஜிய, காங்குலி, கடர்ஜி என்று மருவி வழங்கப்பட்டு வருகின்றது. இந்தக்குலத்தவர் ஒவ்வொர் பெண்களைக் கண்டகாலத்து விவாகம் செய்வதே நற்காலத்தில் இவர்கள் பணத்துக்காக ஆசைப்பட்டு 150, 200, 300 ஸ்திரீகளை விவாகஞ் செய்துகொண்டதாய்ச் சொல்லக் கேள்வி. இக்காலத்திலும் அநேகமாய் 20-பெண்கள் வரையில் விவாகம் செய்துகொள்ளுகிறார்கள். இப்பெண்களும் அந்தக்குலத்தோரை விவாகம் செய்துகொண்டதற்காக மகிழ்கின்றார்கள். இவர்கள் பின் எந்நிலைமையடைவார்களோ அது கடவுளுக்கே தெரியும். இவர்களிற் பெரும்பான்மையாக 8, 9, 10-வயதான பெண்களுக்கே விவாகம் நடக்கின்றது. அவர்கள் இராக்காலத்திற்றான் விவாகம் செய்துகொள்வார்கள். விவாகம் நடந்த முற்கணத்தில் வதுவரர்களைப் பள்ளியறைக்குக் கர்ப்பாதனத்துக்கெனச் செலுத்துகின்றார்கள். அங்கு அவர் அநுபவிக்கும் சுகத்திற்குத் தெய்வமே சாக்ஷி. இவ்விதமான கொடூர விஷயங்களை அத்தேசத்துத் தாய்மார் பெண்களுக்குக் கற்பிக்கின்றார்கள்போலும். ஆதலாற்றான் அவர்கள் 20-வயது வரையில் யௌவனமும் அதன் கிழத்தன்மையும் அடைகின்றார்கள். இனி அவர்கள் சந்ததிகள் துர்பலமாவதற்குக் கேட்கவும் வேண்டுமோ! அவர்களுக்கு வேறு ஒரு சமஸ்காரமில்லை. அவர்களுக்கு மரணத்துக்குப் பின் செய்யவேண்டிய சமஸ்காரங்களிலும் தகனம் ஒன்றுதான் காணப்படுகின்றது. ஏதோ 11-வது தினத்தில் ஏகோதிஷ்ட சிரார்த்தமென்னும் ஒன்றை ஆரம்பித்து எல்லா வருணத்தவ

ரோடும் கூடிக்கலந்து புசித்துக் கலியாணம் போற் கொண்டாடிப் பிராமணர்களுக்கு ஏதேதோ கொடுக்கின்றார்கள். இவ்விதமான உலக விலக்ஷண நடையுடைகள் பூண்ட இவர்களைப் பிராமணர்களுள் எச்சாதியுட் சேர்க்கலாமென்று பார்க்கில் எம்புத்திக்கு ஒன்றும் தோன்றவில்லை. கௌடர்களிற் சேர்ப்போமெனில், சாரஸ்வதர், கான்னியகுச்சர், கௌடர், உட்கலர், மைதிலர் என்று ஐவகைப்பட்ட கௌடர்களுள் வங்காளிகள் என்னும் பெயர் இல்லை. திராவிடர்களுமல்லர். இத்தேசத்தவர்கள் பணத்திற் பெருத்தவர்களே. பணமிகுதியால் இவர்களுக்கு அரசரென்னும் பட்டமுண்டு. இந்நாட்டு ஏழைகள் தென்னாட்டிக் அரசரை ஒப்பாவர். அதற்குக் காரணமெல்லாம் வியாபாரமே. அவ்வளவிருந்தும் இவர்கள் கிருபணர்கள். மற்றவர் பணத்தை மறைக்க வழி தேடுபவர்கள். பாருங்கள் இத்தேசத்தில் ஓர் பண்டித புத்திரர் பழைய புத்தகங்களை அச்சிட்டு விற்று அதனாற் பெரும் பணக்காரரா யிருக்கின்றார். இவற்றை அறிந்தும் தென்னாட்டவர் அதையே வாங்கி வாசிக்கின்றார்களன்றித் தாம் அவ்விதம் முயல்வதில்லை. ஆதலால், பண்டிதர்களே! இனியேனும் முயலுங்கள். நம்மவர்களுள் வார்சொழிந்த புத்தகங்களைக் கொண்டுவந்து எவ்விதமேனும் வெளிப்படுத்த முயல்வார்களென்று எதிர்ப்பார்க்கிறோம்.

குழந்தைகளைப் போஷிப்பது.

குழந்தைகள் சிறுவயதிலேயே பலவித நோய்களுக்கு உள்ளாவதன் காரணம், அவைகள் சரிவரப் போஷிக்கப் படாமையேயாம். குழந்தைகளின் ஜீரணசக்தியில் பல கோளாறுகள் ஏற்படுவதனால், அவைகள் வெகு சீக்கிரத்திலேயே இறந்துவிடுகின்றன.

மிகவும் பலஹீனமான குழந்தைகள் முறையே போஷிக்கப்படுவதினால், காலக்கிரமத்தில் தேஹாரோக்கியத்தை அடைந்து, மிகுந்த சந்தோஷத்துடன் ஜீவித்திருக்கின்றன. குழந்தைகளுக்கு வேண்டியவளவு ஆகாரத்தைக் கொடுக்கத் தாய்மார்கள் தயாராயிருந்தாலும், அவைகளுக்கு ஜீர்ணமாகக்கூடியது எது என்று தெரிந்துகொள்வது முதன்மையான காரியமாகும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி பல வஸ்துக்களைத் தின்னக்கொடுப்பது மிகவும் கொடிய வழக்கம். அதனால், பல கேடுகள் சம்பவிக்கின்றன. குழந்தைகளைப் போஷிக்கும் விஷயத்தில் ஒரு முறையை அநுசரிக்கவேண்டும். அப்படி அடிக்கடி ஆகாரங் கொடுக்கும்படி நேரிட்டால், குழந்தையின் தேகாரோக்கிய நிலைமையைக் கவனித்து, அதற்கு தகுந்தபடி செய்யவேண்டும்.

சில குழந்தைகள் பசியினால் அழுகின்றன; சில தாய்மார்களின் அறியாமையால் அதிகமான ஆகாரம் ஊட்டப்பட்டு, அதன்பலனாக நோய்கொண்டு வலியின்மிகுதியால் அழுகின்றன. ஆதலால், எப்போதும், குழந்தைகளுக்கு எவ்வளவு ஜீரணிக்க முடியுமோ அவ்வளவு ஆகாரமே கொடுப்பது அவைகளுக்கு நன்மையை விளைவிக்கும்.

குழந்தைகளுக்கு மிகவும் சிறந்த ஆகாரம் அவற்றின் தாய்ப்பாலேயாம்; அவைகளுக்குப் பத்துமாதகாலம் வரையிலும் அடிக்கடி பாலூட்டினாலுத்தமம். நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகளுக்குத் தினம் ஒன்றுக்கு ஐந்துதடவைக்குமேல் ஆகாரம் வேண்டியதில்லை. அதாவது முதல் இரண்டு மாதங்கள் தவிர்த்துப் பிறகு பகலில் நான்கு தடவையும் இரவில் ஒரு தடவையும் பாலூட்டவேண்டும். குழந்தைக்கு ஒரு வயது கடையில், பகலில் மூன்று தடவை மாத்திரம் ஆகாரம் கொடுத்து இராத்திரி [illegible] தூங்கும்படி செய்யவேண்டும்.

நல்ல தேகாரோக்கியமுள்ள குழந்தைகளைக் காட்டிலும் பலஹீனமான குழந்தைகளுக்கு அடிக்கடி ஆகாரம் கொடுத்தல் வேண்டும்.

குழந்தைகளை எப்போதும் தாயினிடத்தில் பாலுண்ட வண்ணமாகவே தூங்கும்படி விடக்கூடாது. சில தாய்மார்கள் அழுகிற குழந்தை

களைச் சமாதானப்படுத்த, அவற்றினிடம் சர்க்கரைப் பண்டங்களைக் கொடுத்துவிடுகிறார்கள். இதனால், அவைகள் பல கஷ்டங்களுக்குள்ளாகின்றன வென்பதைக் கவனிக்கவேண்டும். சுத்தமான தண்ணீரே குழந்தைகளுக்கு உத்தமமான பானமாகும்.

குழந்தைகளுக்குப் போதுமான பால் தாயினிடத்தில் கிடைக்காவிடில், அதற்குப் பதிலாக பசுவின்பாலை உபயோகிப்பது நல்லது. பசுவின் பாலில் கொஞ்சம் சுத்தஜலம் கலந்து காய்ச்சி, பிறகு குழந்தைகளுக்குப் புகட்டவேண்டும். குழந்தைகளுக்குப் பால் புகட்ட உபயோகிக்கப்படும் 'நிப்பிள்' முதலியவற்றில் விஷக்கிருமிகள் தங்கக்கூடுமாதலால், அவைகளைக் கொண்டு பால்புகட்டாமல் கிண்ணங்களைக் கொண்டே பால்புகட்ட வழக்கம் செய்வது நல்லது.

குழந்தைகளுக்குப் பால் மறக்கடிப்பதைப் பத்துமாதங்களுக்குப் பிறகுதான் செய்யவேண்டும். இதற்குப் பதிலாக வேறு ஆகாரத்தை க்ரமக்கிரமத்தில் கொடுத்துப் பழக்கஞ் செய்யவேண்டும். அவைகளுக்குப் பன்னிரண்டு மாதங்கள் ஆனவுடன், பால் கொடுப்பதையே நிறுத்திவிடலாம். குழந்தைகளுக்கு வேறு ஆகாரம் கொடுக்கும் வகையில், அவற்றால் ஜீர்ணித்துக்கொள்ளக் கஷ்டமான வஸ்துக்களை ஒருபோதும் கொடுக்கக்கூடாதென்பதைத் தாய்மார்கள் கவனிக்கவேண்டும்.

குழந்தைகள் பழவர்க்கங்களைக் கண்டால் அவற்றைப் பெற விரும்பி அழுவது சகஜம். அப்படி பழங்களை அவைகளுக்குக் கொடுக்க விரும்பினால், கொடுக்கப்படும் பழமானது நன்கு பழுத்திருக்கின்றதா வென்று கவனிக்கவேண்டும். ரஸச்சத்துள்ள பழுத்த பழங்களைக் குழந்தைகள் தின்பதால் அவைகளுக்கு யாதொரு கெடுதியும் ஏற்படுவதில்லை.

———(o)———

கைத்தொழில் வன்மை.

(கெ. கலியாணசுந்தர நாடார், கொழும்பு.)

ஒரு தேசமாவது, ஜனஸமூகமாவது நன்னிலையடைந்து க்ஷேமத்தைப் பெற்றிருக்க வேண்டுமாயின் கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி செய்யப்பட்டாலன்றி, அத்தேச ஜனங்களுக்குக் கதிமோக்ஷங்கிடையாதென்பது உலகப் பிரசித்தியான உண்மை.

மேனாட்டார் மகோன்னத நிலையடைந்து விளங்குவது அங்குள்ள கைத்தொழில் அபிவிருத்தியினாலேயேயாகும். மேனாட்டார் தற்காலம் உலக முழுமையையும் அரசாளும் ஜாதியினராயிருக்க, ஒரு காலத்தில் செல்வாக்கில் சிறந்திருந்த நமது பாரதமாதா அடிமை வாழ்க்கையில் அமிழ்ந்துழல்வது கைத்தொழில் க்ஷீணதிசையடைந்ததினாலேயே யென்பது பிரசித்தம். பல நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவில் நெய்யப்பட்டு எகிப்து முதலிய பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மிக மிருதுவான 'மெல்லிய மஸ்லின் துணியைப்போன்று இன்று நவீன நாகரீக மேனாட்டார் மெஷினுதவியால் உற்பத்திசெய்ய முடியவில்லையாம். அவ்வளவு பிரக்யாதி பெற்றிருந்த நம் நாடு தற்காலத்தில் நம் நாட்டாருக்குத் தேவையான ஆடைகளைக் கூட உற்பத்தி செய்துகொள்ள முடியாத கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டது. லண்டனில் கைத்தொழிற் சாலைகளின் வன்மையால் தொழிற் சங்கங்களும், பார்லிமெண்டில் அவர்களின் பிரதிநிதிகளும் ஏற்பட்டிருந்தது போக இன்று நமது காலத்திலேயே மிஸ்டர் மாக்டொனல்டைத் தலைவராய்க் கொண்ட கைத்தொழிற்கக்ஷியார் உலகை அரசாள ஏற்பட்டுவிட்டனர். நம் நாட்டிலுள்ள தற்காலத்திய சாஸ்திர ஆராய்ச்சிக்கார மேதாவிகளும், பட்டதாரிகளும் ஒரு வேலைகூடச் செய்யமுடியாத நிலைமையில் தேசத்தை வானபியர்த்தம் உயர்த்திவிட முயற்சிக்கின்றனர்.

வேலையில்லாக் கஷ்டம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கையில் ஏழைத் தொழிலாளருக்கு தொழிற்சாலைகளை ஸ்தாபித்து, ஜீவனம்பத்திற்கு வழி செய்து கொடுக்கத் தேசாபிமானிகளாவது குலாபிமானிகளாவது முன்வருகின்றாரில்லை. நாகரீகம் வாய்ந்த தேசங்களின் பிரதான நகரங்களிலுள்ள ஒவ்வொரு தொழிற்சாலைகளிலும் பதினாயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளருக்கு குஷாலான வேலைகள் அமைந்திருக்கையில் இந்தியாவில் வயிற்றுச் சோற்றுக்கு லாட்டரியடிக்கிற லக்ஷக்கணக்கான தேசமக்களின் பசிப்பிணியைப் பரிகரிக்கப் பாடுபடுந் தலைவர்கள் தோன்றினால் மட்டுமே நமது தேசம் கதிமோக்ஷமடையும். கைத்தொழில் வன்மையைப்பற்றிய சிறந்த வியாஸங்கள் பல பத்திரிகைகளிலும் அடிக்கடி வெளிவருகின்றன.

மேனுட்டாரின் கைத்தொழில் வன்மையில் ஆச்சரியப்படத்தக்க அதிசயமான குறிப்புகள் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுவதுதான் எமது நோக்கம். மான்செஸ்டர் நகரிலுள்ள (Horrockses Crewdson Ltd.) என்ற புடவை நெசவுக் கம்பெனியின் இயந்திரசாலை சுமார் 60 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் மேன்மாடிகளுடன் கட்டப்பட்டு அதில் தினசரி ஆண்களும் பெண்களுமாக ஒன்பதினாயிரத்துச் சொச்சம் தொழிலாளர் வேலை செய்கின்றனராம். இந்தக்கம்பெனியார் நம் நாட்டுப் பருத்தியை சொற்ப விலைக்கு நம்மிடம் கொள்ளையடித்துப் போய் சிலையில் ஆடைகளாக்கி ஒன்றுக்கு ஐம்பது விலையாக நம்மிடமே விற்றுப் போடுவதும் சமயாதிக்கிற பல ஐரோப்பியக் கம்பெனிகளி லொன்று.

இன்னும் மரப்பட்டை, மூங்கில், கந்தைத்துணி முதலிய உபயோகமற்ற பொருட்களைக் கொண்டு காகிதம் செய்யப்படுவதை யாவரும் கேள்விப்பட்டிருக்கிறோம். பிரபல பத்திரிகைக் கம்பெனி யொன்றில் மெஷின்களின் உதவியினால் காலை 7½ மணிக்கு மரங்களை வெட்டி அம் மரப்பட்டைகளையே காகிதமாய் உற்பத்திசெய்து, சமாச்சாரங்களை அச்சிட்டு இரவு 10½ மணி மெயிலில் சந்தாதாரர்களுக்கு தபாலிலனுப்புகிறார்களாம். கலிகாலக்கோலமல்லவா இது. உலகமெங்கும் மிகுதியாய்க் காணப்படுகிற (Ford car) "போர்ட்" மோட்டார்கார் சொந்தக்காரராகிய மிஸ்டர் ஹென்றி போர்ட் துரைக்கு டி மோட்டார் விற்பனையினால் ஒருமணிநேரத்திற்கு நாற்பது பவுன்வீதம் ஆதாயங் கிடைக்கிறதாம். இவருடைய மோட்டார் தொழிற்சாலைகளில் சராசரி 7 நிமிஷத்திற்கு ஒரு மோட்டார்கார் வீதம் செய்து முடிக்கப்படுமாம். இவருடைய சொந்த ஆதாயமட்டு மன்றி இவரது தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு ஜீவனோபாயத் தொழிலும் கிடைக்கிறது. தமது சொந்தக் கைத்தொழிலின் முயற்சியால் மேம்பாடடைந்த இப் புண்ணிய சீலர் சமீபத்தில் அமெரிக்காக் கண்டத்தின் பிரசிடென்ட் (தேசாதிபதி) யாகத் தேர்ந்தெடுக்கப் படலாமென்றும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இதுதவிர, ஸ்ரீமத் விவேகானந்தஸ்வாமிகள் நமது புராதன ஹிந்து மதத்தின் பெருமையை நிலைநாட்டிய சிகாகோ (chicago) நகரானது உலகப் பிரசித்திபெற்ற கைத்தொழில் ஸ்தலம். அவ்விடத்திலுள்ள ஆர்மர் அன் கோ (Armour&co) என்ற பிரபல மாமிச விற்பனைக் கம்பெனியின் தொழில் முறையைச் சிறப்பித்து, 28 வருடங்களுக்கு முன் (1900-ம் வருடத்தில்) பிரசுரமான ("Progress of invention in the 19 th; Centuary" by Mr. Edward w. Byrn) என்ற புத்தகத்தில் விஸ்தரித்துச் சொல்லப்பட்டிருக்கிற விவரங்கள் ஆச்சரியமானவை. 1891-வருடத்தில் அந்தக் கம்பெனியார் 1714000 பன்றிகளையும், 712000 மாடுகளையும், 413000 ஆடுகளையும் மாமிச விற்பனைக்காகக் கொன்றிருக்கின்றனராம். மாமிசம் பதனிடும் இலாகாவில் மாதசம்பளம் பெறும் தொழிலாளர் 7900 ஆட்களும் 2250 பேட்டார் வண்டிகளும் வேலை செய்கின்றனவாம், 140 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஓர் பிரமாண்டமான காம்பவுண்டில் 50 ஏக்கர் நிலத்தில் இந்த தொழிற்சாலை கட்டிடம் வியாபித்திருக்கின்றதாம். மாமிசங்களை ஐஸ்கட்டியில் பக்குவப்படுத்தி சேமிக்கிற ஸ்டோர் 40ஏக்கர் நிலத்திலிருக்கின்றதாம். டி கம்பெனியில் 130000 டன் இறைச்சி ஸ்டாக் இருப்பதுண்டு. மாமிச விற்பனை மட்டுமன்றி இரத்தம், ஜவ்வு முதலிய கழிவுப் பொருட்களைக் கொண்டு வஜ்ரமும், உரமும் (எரு) செய்கின்றார்களாம். வஜ்ரம் செய்யும் சாலை தனியாக டி காம்பவுண்டில் 15 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டு அதில் 600 பேர் வேலை செய்கிறார்கள். 1891-ம் வருடத்தில் 7000,000 ருத்தல் வஜ்ரமும் 9500 டன் எருவும் செய்யப்பட்டன. டி கம்பெனியின் பல இலாகாக்களிலுமுள்ள தொழிலாளர் ஒரு பெரிய பட்டாளத்தை விட அதிகம். மாதமொன்றிற்கு லக்ஷக்கணக்கான டாலர்கள் சம்பளமாய்க் கொடுக்கப்படுகின்றன.

இன்னும் இதேவிதமாகப் பல தேசங்களின் கைத்தொழிலபிவிருத்தியை நன்கு கவனித்தால் பிரமிக்கத்தக்கதா யிருக்கின்றன.

இந்தியாவில் இத்தகைய அரிய சாதனங்கள் அமைக்கிறதற்கில்லையாயினும் தேசபக்தசீலமாய் ஒருவர் இருவர் தமது காலத்தை யெல்லாம் தொழில் பழகுவதில் செலவிட்டு அனுபவமடைந்து வந்தால் தாய்நாட்டினர் அப் பெருந்தகையாளரை ஆதரிக்கவுந் தயாரயில்லை யென்பதைவிட வேறெதைச் சொல்வது? நாடார்குல நவமணியாய்ப் பல தேசங்களிலும் சென்று விசேஷத் தொழில்முறைகளைக் கற்றுத் தாய்நாடடைந்த ஸ்ரீமான் ராஜு தேவராம் நாடாரவர்களை ஆதரிக்கப் பத்துலக்ஷம் நாடார்கள் பின்வாங்கிவிட்டனர். உடை (முன்) மரப்பட்டையினால் காகிதம் செய்வாராம். களிமண்ணினால் சோப்பையும், கருப்புக் கட்டியினால் சீனியும் செய்வாராம் எனப் பலவிதமாய் பாராட்டி யெழுதினார்கள். சமீபத்தில் நெருங்கு மிஸ்டர் ராஜு அவர்கள் அபிப்பிராயம் கேட்டவுடன் கண்ணை மூடிக் கொண்டார்கள். சங்கத்தின் தீர்மானத்திற் கிணங்கி ஈனத்தொழிலைக் கைவிட்ட ஏழைத்தொழிலாளருக்கு ஆதரவளிக்க இதைவிடச் சிறந்த நற்சமயம் எப்பொழுதாவாய்க்குமோ அறியோம்.

சென்னை தொண்டமண்டலச் சான்றோர் தரும பரிபாலன மகாசபைத் தலைவர்,

பழவேற்காடு, ஸ்ரீமான், நயினியப்ப கிராமணியார் அவர்களின் மரணம்.

இவர் இச்சபையில் இருபத்தைந்து வருடமாக சாஸ்வதத் தலைமை பெற்றுள்ளார். இவரால் இச்சபை நல்ல நிலைமைக்கு வந்ததென்றே கூறலாம். இவரது சலியா முயற்சியாலும், ஊக்கத்தாலும் சபைக்கு சில புதிய வரும்படியைத் தேடியுள்ளார். திருப்போரூர் வசந்தவுற்சவத் தோட்டத்தை சீர்படுத்தி, வெகுகாலத்திற்கு முன் நின்ற வசந்த வுற்சவத்தையும் மறுபடியும் என்றும் நடந்து வருதற்குரிய ஏற்பாடுஞ் செய்துள்ளார். இவருடைய முயற்சியால் சிலமாகவிருந்த திருப்போரூர் சத்திரம் முன்கட்டு கட்டப்பட்டு முடிவெய்தியது. திருவண்ணாமலையிலிருக்கும் நமது சத்திரம் வெகு காலமாக பிறருடைய அனுபவத்திலிருந்ததை நம் வசப்படுத்தியுள்ளார். இவர் வைஷ்ணவ சமயக் கொள்கையையுடையவரே யாயினும் சைவசமயப் பத்திலேயே மிக்குயர்ந்தவர். இப்பொழுதும் சென்னையிலுள்ள இரண்டு நமது தரும சத்திரக் கேவலங்கள் ஒன்று சென்னை சிட்டி கோர்ட்டிலும், இன்னொன்று சென்னை ஹைகோர்ட்டிலும் இவரால் நடத்தப்பட்டு வருகின்றது. இன்னும் பல தரும கயிங்கிரியத்தில் ஈடுபட்டு உழைத்துவரும் இவர், தமது அறுபத்தைந்தாவது வயதில் 1924௵ அக்டோபர்௴ 12ௗ ஆதிவாரம், மாலை 2-மணிக்கு ஆச்சாரியார் திருவடி யடைந்ததற்காக யாம் பெரிதும் துக்கிக்கின்றேம். இவரது ஆன்மாவுக்கு முத்தியளிக்கவும், இவரை இழந்து வருந்தும் மனைவி மக்களுக்கும் இனஜன பந்துக்களுக்கும் ஆறுதலளிக்குமாறு முருகனை மும்முறையும் இறைஞ்சுகின்றேம்.

ஷை சபைக் காரியதரிசி
த. விஜயதுரைசாமி கிராமணி,
(பத்திராதிபர்.)

———(s)———

போலீஷ் கோர்ட்டும், திருஞானசம்மந்த செட்டியும்.

(5-ம் வால்யம், 332-வது பக்கத் தொடர்ச்சி.)

யாம் இந்த கோர்ட்டு விஷயத்தை ஒரு பொருட் படுத்தாது விட்டுவிட்டோம். வன்னியகுல மித்திரன் பத்திராதிபர் ஆ. சுப்பிரமணிய நாய்கர் 8-பக்கமுள்ள ஒரு துண்டு பிரசுரம் அச்சிட்டு எங்கும் பரப்புகிறதாகத் தெரிகிறது. (இவ்விதம் கிளரிவிட்டு யாம் வின்சன்டைக்கு வருவதாகக் கூவுகிறார்கள்.) இன்று (25-10-24) திருநெல்வேலி நாங்குநேரி தாலுக்கா கூடங்குளத்திலிருந்து எமது நண்பர் ஸ்ரீ, கி. மு. ம. மரிய அந்தோணி நாடார் அவர்கள் ஒரு பிரதி தபால் வழியாக எமக்கனுப்பினர். அப்பிரதியை இதற்குமுன்பே யாம் கண்டும்,

ஷன்றிப்பார்க்காமல் அலட்சியஞ் செய்துவிட்டோம். ஷை பிரதியை அனுப்பினவரும், தெய்வச்சிலைநல்லூர், ஸ்ரீ அ. க. ம. வே. அம்மையப்ப நாடாரும், இன்னும் சிலரும் நடந்த உண்மையை பத்திரிகை வாயிலாக வெளியிடவேண்டுமென்று வற்புறுத்தியதாலும், அப்பிரதிநிதி உண்மைக்கு மாறாய் எழுதியிருந்ததை கண்டிக்க வேண்டுமென்றுந் துணிபாலும் சன்றெழுத ஆரம்பித்தனம்.

சென்ற பெப்ருவரி மாதப் பத்திரிகையில் ஸ்ரீ சுப்பிரமணிய நாயகர் எமக்கனுப்பிய நோட்டீசை யுத்தேசியே அச்சிட்டும், திருஞானசம்பந்த செட்டியாருக்கு கடைசிவரைக்கும் நோட்டீஸ் அனுப்பாததையும் தெரிவித்துள்ளோம். அவர் எமக்கு அனுப்பிய நோட்டீஸுக்கு பதில் வக்கீல் Mr. T. S. இராஜகோபால ஐயர் அவர்கள் மூலமாய், 1924௵ ஏப்ரல்மீ 14௳ பின்வருமாறு அனுப்பினோம்.

To

S. Rangasami Aiyengar Esq.,

High Court Vakil, No. 9, Thambu Chetty street, G. T., Madras.

Dear Sir,

Your notice dated the 10-th inst. addressed to my client T. Vijaya Duraisami Gramani, Editor, 'Kshatriya Mitran' given at the instance of your clients A. Subramanya Nayagar and A. Balasundara Nayagar was placed into my hands with instructions to reply thereto as follows:—

My client is not in a position to understand by a reference to the February part of Kshatriya Mitran, which passage you refer to, as a passage defamatory of the Vanniya Community in general and particularly of Arumuga Nayagar, the author of Varna Tharpanam. I am desired to ascertain from you in writing the passage in Tamil to which your clients take exception, and which they say is defamatory as aforesaid. On receipt of a reply I shall see my client and let you have a reply to the notice under notice. I hope your clients will oblige my clients with this request, especially as my client is not able even to smell anything defamatory in the passages.

Yours truly,

[Sig] T. S. Rajagopala Iyer

High Court Vakil

14...4...24.

இதில் கண்ட விஷயம்.

"எனது கட்சிக்காரன் குற்றமுள்ள பாகத்தைத் தெரிந்துகொள்ள முடியாமையால், தாங்கள் தெரிவித்த பிப்ருவரி மாத க்ஷத்திரிய மித்திரனில் எந்த பாகம் வன்னியகுலத்தவர்களையும், வருணதர்ப்பண நூலாசிரியரையும் நிந்தித்துள்ள பாகமென தங்களது கட்சிக்காரர்கேட்டு தெரிவிப்பின் எனது கட்சிக்காரன் பதிலளிக்கத் தயாராயிருக்கிறான்" என எமது சார்பாயுள்ள வக்கீல் எழுதியனுப்பினர். இவ்விதம் ஏப்ரல்மீ 14௳ நோட்டீஸ் அனுப்பிவிட்டு, ஏப்ரல்மீ 19௳ மாலை போட்மெயிலில், திருவாங்கூர், நாகர்கோவிலில் 21, 22௳களில் நடக்கப்போகும் கான்பரன்சுக்குச்சென்றோம், இன்னும் சில கான்பரன்சுக்கும், ஊருக்குஞ் சென்று, மேமீ 12௳ காலை போட்மெயிலில் சென்னை வந்து சேர்ந்தோம்; (Reper Kshatriya Mitran Vol. 5. Page 238) ஆகவே ஏப்ரல் மாதம் 19௳யிலிருந்து மேமீ 12௳ வரைக்கும் நடந்த நோட்டீஸ், கோர்ட்டு விவகாரங்கள் எமக்கொன்றுந் தெரியாது. ஆனால் இதன் மத்தியில் சுதேசமித்திரனில் 7௳ நடந்த கோர்ட்டில் திருஞானசம்பந்த செட்டி மன்னிப்புக் கேட்டுக்கொண்டதாக எழுதப்பட்டிருந்ததை திருநெல்வேலி பாலம், ஸ்ரீ காளியப்ப நாடார் மாளிகையில் கண்டேம். ஆச்சரியமடைந்தேம். இங்கு அவர் நோட்டீஸ் பெறவில்லை என்றதையும், யாம் முதலில் தேடிப்போகும்பொழுது, அவருடைய வீட்டின் திண்ணையில் குந்தியிருந்த ஒரு சிறுவன் "எது செட்டியாருக்கு கிராக்கிமேல் கிராக்கி வருகிறது" என்றான். "அப்படி யொன்றுமில்லையே" என்றேன். "இராவில்கூட இருவர் வந்து ஏதோ ஒரு சமாதான விஷயம் பேசுகிறார்கள்" என்றான். அச்சமாதானத்தை வேறுவிதமாக நினைத்தேன். இப்பொழுது இதோடுசேர்த்துப்

பார்க்கவேண்டி வந்தது. (சமாதானஞ் செய்ய வந்த இருவர்களும் இன்னார் என எனது நண்பர் ஒருவரால் சொல்ல இப்பொழுது தெரிந்துகொண்டிருக்கிறேன். அது எவ்வளவு தூரம் உண்மையோ அறியேன்.) நிற்க,

மேலே ஏப்பிரல் 14௳ எம் வக்கீல் Mr T. S. இராஜகோபால ஐயரைக்கொண்டு, வாதி வக்கீல் Mr S. இரங்கசாமி ஐயங்காருக்கு நோட்டீஸ் கொடுத்ததை தெரிவித்துள்ளோம், அதற்கு ஐயங்கார் போய், வாதிக்கு வக்கீல் Mr V. N. குப்புராவு அவர்கள் ஏற்பட்டு (23-5-24) பின்வரும் நோட்டீஸ் அனுப்பினார்.

To
M. R. Ry.
T. S. Rajagopala Iyer
High court vakil, Madras.

Sir,

with reference to your letter dated 14-4-24 and addressed to Mr. S. Rengasawmy Iyengar High court vakil on behalf of my clients A. Subramania Naicker and A. Balasundara Naicker I have been instructed to draw in particular your attention to page 173 of 'Kshatriya Mitran' of February 1924 of which your client is the editorinter and publisher.

Yours truly.

V. N. KUPPU RAU, B. A., B. L.,
HIGH COURT VAKIL,
EGMORE.
Madras, 23-rd April 1924.

இதில்கண்ட விஷயம்.

“உங்களுடைய 14௳ கடிதம் கிடைத்தது. நீங்கள் 1924ஞ பெப்ருவரி மாதத்திய க்ஷத்திரிய மித்திரன், 173-வது பக்கத்தில் உங்களுடைய கவனத்தை செலுத்தினால் அக்குற்றம் விளங்கும்” என வெழுதியுள்ளார். அப் பக்கத்தில் குற்றமிருந்தாலல்லவோ எடுத்தெழுதிக்காட்டப்போகிறார்கள். எம் வக்கீல் கேட்டகேள்விக்கு பதில்சொல்ல இவர்களால் முடியாமையால், முதலில் தேடிய வக்கீல் இவர்களை விட்டுவிட்டிருக்கலாமென நினைக்கவேண்டி வருகிறது. அவர் கைவிடவே Mr V. N. குப்புராவைக் கேட, அவர் அதற்கு பதிலெழுதி நன்றாய் விளக்கிவிட்டார். எம் வக்கீல் (Passage or Passages) வாக்கியம் அல்லது வாக்கியங்கள்” தெரிவிக்கக் கேட்டதற்கு 173-வது பக்கத்தைப் பார்க்கச்சொன்னார். இவ்வளவு போதாதா சமாதானம். அதுவும் எம் கட்சிக்காரருக்கு விளங்காமையால், மறுபடியும் ஏப்ரல் 29௳ Mr V. N. குப்புராவு அவர்களுக்கு பின்வரும் நோட்டீஸை அனுப்பினார்.

To
V. N. Kuppu Rau Esqr., B. A; B. L;
High Court Vakil, Egmore,
MADRAS.

Dear Sir,

Your notice dated the 23-rd April 1924 given on behalf of your clients A. Subramanya Naicker and A. Balasundara Naicker, was communicated to my client and I am sorry to say that in spite of your lucid explanation, my client is not able to pick from page 173, any passage defamatory of your clients or of the Vannya Community.

I must therefore request you if you or your clients are so minded to quote the passage or passages and show how they are defamatory of your clients or of the community to which they belong.

Yours truly.

[Sig] T. S. Rajagopala Iyer
High Court Vakil
29-th April.

இதிற்கண்டது.

“என்னுடைய கட்சிக்காரனுக்காக, தாங்கள் ஏப்பிரல் 23௳ அறிவித்த நோட்டீஸில் நான் வருத்தத்தோடு சொல்லுவதாவது, தாங்கள் தெளிவாக விளக்கியும் என்னுடைய கட்சிக்காரன், 173-வது பக்கத்திலிருந்து குற்றமுள்ள வாக்கியத்தை எடுக்க சக்தியில்லை. ஆகையால் நீராவது உமது கட்சிக்காரராவது, அந்த குற்றமுள்ள வாக்கியத்தைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்” என எமது வக்கீல் எழுதியுள்ளார். இதற்கு தகுந்த சமாதானஞ் சொல்லாமல் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டிடம் சம்மன் வாங்க சென்றார்கள்.

(இன்னும் வரும்.) பத்திராதிபர்.

குலாபிமானமும், தேசாபிமானமும் ஒருங்கே அமையப்பெற்றுள்ள,
சின்னமனூர், ஸ்ரீமான், அ. மு. கு. விஜயரத்தினசாமி நாடாரவர்கள் மீது
அன்புகூர்ந்து பாடிய வாழ்த்துப்பா.

(மு. கு. பழனிச்சாமி நாடார், சின்னமனூர்.)

(சரசக்காரமாமா) என்ற வர்ணமெட்டு.

விகசிதக்கடல்பூமி புகழ்
விஜயரத்தினசாமி
தகமைசேர்சிவகாமி பதம்
தரிசிக்குங்குணநேமி
தயைசார்ந்த மயமார்ந்த நயங்கூர்ந்த ஸ்ரீமான்
விஜயரத்தினசாமி (விக)

சகலகலைக்கியாணி உயர்
தத்துவமுணர்ஞானி
புகலும்வாய்மைநிதானி சொலும்
பொதுஜனஅபிமானி
பொலவுறயாளன் அறிவாளன் நிறைதோளன் பூமான்
விஜயரத்தினசாமி (விக)

(தொகையறா)

மன்னுபுகழ் சின்னமனூர் நன்னகரவீதினில்
வாழ்கின்ற ராஜ சிங்கம்
தன்னகரில் க்ஷத்திரிய வித்தியா அபிவிர்த்தி
சங்கம் வளர்த்த தங்கம்

(பாட்டு பின்னடி)

தன்மைநிறைந்தசீலன் சொல்லத்
தகுந்தமதிவிசாலன் (விக)

(தொகையறா)

சிரம குகவுரவு சேர்கிதன்ன நம்பின்
சிநேகவாஞ் சையினில் மிக்கோன்
தாராகவேநயக் தன்புடன் ஆர்க்கேப்பழனிச்
சாமி சொல்லணியத் தக்கோன்

(பாட்டு பின்னடி)

சந்ததம்புகழ்சூழ்க இந்தத்
தரணிதன்னிலேவாழ்க (விக)

———(o)———

☞ * க்ஷத்திரியன். *
தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

திருப்போரூர் தேவஸ்தான மடாதிபதிகள், கிராமணிகளுக்கு எழுதிக் கொடுத்த, உடன்படிக்கைகள்.

6-வது பட்டம்.

ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராகிய திருப்போரூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியார் தேவஸ்தானம் தர்மகர்த்தாவாகிய சிதம்பர தம்பிரான் அவர்கள் கிராமணி வகையராக்கள் அனைவருக்கும் ஆசிர்வதித்து மனப்பூர்வமாய் யெழுதிக்கொடுத்த உடன்படிக்கை என்னவென்றால் ஷெ.யூர் தேவஸ்தானம் திருவாபரணம் வகையரா முதலாகியதும், சர்க்கார் தாப்பு, கச்சிஸ்பா அய்யர் காரியாபத்தில் யேர்படுத்தின கணக்குப்படிக்கு மதிப்புரூபாய் 11514-7-9 க்கு சர்க்கார் கட்டளைப்படிக்கு ரூபாய் 12000 க்கு நாம் ஜாமீன் கொடுக்க சம்மதிவாரியாய்கோரினபடியினால் முன்னால் திருப்போரூர் கிராமம் உங்கள் வமிசத்தோராளபடியினாலேயும் அந்த மிராசை சுவாமிக்கு நித்திய படித்தரம் முதலாகிய பூஜைகளுக்கும் உங்கள் வமிசத்தவர் தத்தம் பண்ணியிருக்கிற படியினாலேயும் முன்னாலே பரிபூரணமான முத்துக்குமார தம்பிரான் அவர்களுக்கு உங்களாலே கேமித்திருக்கிற பட்டிபுலம் முத்து வெங்கட கிராமணி புதுப்பாக்கம் குழந்தைகிராமணியும் முன்னாலே சர்க்காருக்கு (மால் ஜாமீன்) குடுத்தவாளபடியினாலே, இப்பவும் சர்க்கார் சட்டப்படிக்கு யித்தனாள் நம்மிட கோரிக்கைபடிக்கு நீங்களும் சம்மதிவாரியாய் மேலெழுதிய ரூபாய் 12000க்கும் சர்க்காரில் நமக்காக மேலெழுதிய உபயத்திராளும் ஜாமீன் கொடுத்தபடியினால் தேவஸ்தான திருவாபரண வகையரா முதலாகியதும் உங்களுக்கு வேண்டும் பொழுது கணக்குப்படிக்கு தடங்கலில்லாமல் பார்வையிட்டுக் கொள்ளக் கடவீராகவும். மேலெழுதிய திருவாபரணம் வகையரா மாமூல் படிக்கு நம்மிட வசத்திலிருக்கிறது அதிலே யாதொரு வித்தியாசம் வந்தால் நாமே உங்களுக்கு உத்திரவாதம் பண்ணுகிறோம் தேவஸ்தானத்தை குறித்து செய்காரியட, தவிர்க்கப்பட யெப்பேச்சாயிருந்தாலும் நாமும் நீங்களுமாய் யோசனை செய்துக்கொண்டு சுவாமிகாரியங்களில் யெவ்வளவும் கொறைச்சல் வராமல் நடப்பித்துக்கொண்டு வருகிறது இந்தப்படிக்கு நம்மிட மனராஜியில் யெழுதிக்கொடுத்த உடம்படிக்கை.

1823 வருஷம் செப்டம்பர் மீ 29-க்கு செல்லு சுபானுவருஷம் புரட்டாசி மீ 15உ

சிதம்பர தம்பிரான் கையெழுத்து

சாக்ஷிகள்.

காசினு குருக்கள் அதிவேல்

காசினு குருக்கள் குமாரன்

வைத்தி குருக்கள் அதிவேல்

யெழுதினவன் சன்னதி கணக்கு முத்துக்கடயின் கையெழுத்து.

7-வது பட்டம்

ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய திருப்போரூர் ஸ்ரீ சுப்பிரமண்யசுவாமியார் தேவஸ்தான தர்மகர்த்தாவாகிய சிவசங்கர தம்பிரான அவர்கள் கிராமணி வகையராக்கள் அனைவருக்கும் ஆசீர்வதித்து மனப்பூர்வகமாய் யெழுதிக்கொடுத்த உடன்படிக்கை யென்னவென்றால் ஷெயூர் தேவஸ்தானம் திருவாபரணம் வகையரா முதலாகியதும் சர்க்கார் தாப்பு (கச்சிஸ்பா அய்யர்) காரியாபத்தில் யேர்படுத்தின கணக்குப்படிக்கு மதிப்பு ரூபாய் (11514-7-9) சர்க்கார் கட்டளைப்படிக்குரூபாய் (12000) நாம் ஜாமீன் கொடுக்க சம்மதிவாரியாய் கோரினபடியால் பூர்வம் திருப்போரூர் கிராமம் உங்கள் வமிசத்தோராளபடியினாலேயும் அந்த மிராசை சுவாமிக்கு நித்தியபடித்தரம் முதலாகிய பூஜைகளுக்கு உங்கள் வமிசத்தார் தத்தம் பண்ணியிருக்கிறபடியினாலேயும் முன்னாலே பரிபூரணமான சிதம்பர தம்பிரான் அவர்களுக்கு உங்களாலே கேமித்திருக்கிற பட்டிப்புலம் நாராயண கிராமணி, புதுப்பாக்கத்திலிருக்கும் யெகாட்டூர் குழந்தை கிராமணியும் முன்னாலே சர்க்காருக்கு மால்ஜாமீன்

கொடுத்தவ ரானபடியினாலேயும் இப்பவும் சக்கார் சட்டப்படிக்கு இந்தநாள் நம்மிட கோரிக்கைபடிக்கு நீங்களும் சம்மதிவாரியாய் மேல் யெழுதிய ரூபாய் 12000 க்கும் சர்க்காரில் நமக்காக மேலெழுதிய உபயத்திராளும் ஜாமீன் கொடுத்தபடியினால் தேவஸ்தானம் திருவாபரணம் வகையரா முதலாகியதும் உங்களுக்கு வேண்டும்போது கணக்கு படிக்கு தடங்கலில்லாமல் பார்வையிட்டுக் கொள்ளக் கடவீராகவும்.

மேல் யெழுதிய திருவாபரணம் வகையரா மாமூல்படிக்கு நமமிட வசத்திலிருக்கிறது அதிலே யாதொரு வித்தியாசம் வந்தால் நாமே உங்களுக்கு உத்திரவாதம் பண்ணுகிறோம்.

தேவஸ்தானத்தைக் குறித்து செய்காரியம் தவிர்காரியம் யெப்பேச்சா யிருந்தாலும் நாமும் நீங்களுமாய் யோசனை செய்துகொண்டு சாமிகாரியங்களில் யெவ்வளவும் குறைச்சல் வராமல் நடத்திக்கொண்டு வருகிறது.

இந்தப்படிக்கு நம்மிட மனோராஜியில் யெழுதிக்கொடுத்த உடன்படிக்கை.

1827௵ ஜூன்மீ 18௳க்கு செல்லுவியவருஷம் ஆனிமீ 6௳

சிவசங்கர தம்பிரான் கையெழுத்து:

சாக்ஷிகள்.

வயித்தி குருக்கள் அறிவேன்

நயினு குருக்கள் அறிவேன்

இவர்கள் அறிய யெழுதின நன்மைக்கு சன்னதி கணக்கு முருகப்பிள்ளை கையெழுத்து.

7-வது பட்டம்.

ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்டநாயகராகிய திருப்போரூர் ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமியார் தேவஸ்தானம் தர்மகர்த்தாவாகிய சிவசங்கர தம்பிரான் அவர்கள் கிராமணி வகையராக்கள் அனைவோருக்கும் ஆசிர்வதித்து மனப்பூர்வமாய் யெழுதிக்கொடுத்த உடம்படிக்கை யென்னவென்றால் ஷை தேவஸ்தானம் முதல் பட்டம் சிதம்பர சுவாமியார் நாள்முதல் ஆராவது பட்டம் சிதம்பர சுவாமியார் நாள்வரையில் சுவாமியார், ஸ்துலைவகள் சுரோத்திரி கிராமங்களும் திருவாபரணம் பாத்திரம் பந்தம், பசுமாடுவகையராக்களும் நம்மிடத்வையாகிய மடம், தபலை, சொம்பு,. கம்பம்... பசு, மாடு, தண்டலம் கிராமம் மிராசுவகையராமைத்த யெப்பேர்ப்பட்ட ஸ்துலைவகளும் பத்திரமாய் காப்பாத்திக்கொண்டு நித்திய படித்தரம் வகையரா உச்சவங்களும், மடத்து, மயேஸ்வர பூஜைகளுக்கும் சிலவானது யோகமைத்த ஆஸ்திகள் சுவாமிக்கே தவிர மைத்த யாதாமொருவருக்கும் சுவந்திரமில்லை. மேலும் சுவாமியார் ஸதுலைவகளானது நம்மிடமடத்து ஸதுலைவகளாவது தானாதி விக்கிரயங்களுக்கு முன்னாலே யிருந்த சுவாமிகளாவது நாமாவது பிர்க்காலம் வரப்பட்ட தர்மகர்த்தாக்களாவது யெவ்வளவும் விர்ப்பனை செய்யக்கூடாது, நீங்கள்ஜாமீன்தாரானபடியினாலேயும்திருப்போரூர் கிராமம் மிராஸை சுவாமிக்கு தத்தம்செய்த வம்சத்தாரான படியினாலேயும் சன்னதிக்கு படித்தரம் குறைவு வந்தகாலங்களில் குடுத்து நடப்பித்துவந்த பாத்தியம் உங்களது ஆனபடியினாலே மேலெழுதிய ஸ்துலைவயை நாம் விற்பனை செய்து வித்தியாசம் நேரிடுமேயாகில் நீங்களே முன்னின்று சாமிசொத்துகளைசாமிக்கே வரும்படியான ஜாக்கிரதை செய்யவும் அதற்கு நாம் யெதிர் உத்திரவு சொல்லவேண்டியதில்லை இந்தப்படிக்கு நம்மிட ராஜியில் யெழுதிக்கொடுத்த உடம்படிக்கை.

1831-மே-10-தேதிக்கு செல்லுவருஷம் காவருஷம் சித்திரைமீ 29௳

சிவசங்கர தம்பிரான், கையெழுத்து.

சாக்ஷிகள்.

தெலுங்கில்

சாமினாத குருக்கள் அரிவேன்

செதம்பர பண்டாரம் அரிவேன்

இவர்கள் அரிய இந்த உடன்படிக்கை யெழுதின நன்மைக்கு சன்னதி கணக்கு முருகப்பிள்ளை கையெழுத்து.

7-வது பட்டம்.

விஜய வருஷம் சித்திரைமீ 12-க்கு 1833-வருஷம் யேப்ரல் மாதம் 22௳ ஸ்ரீ அகிலாண்ட

கோடி பிரமாண்ட நாயகராகிய திருப்போரூர் ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமியார் தேவஸ்தான தருமகர்த்தா அவர்களாகிய வேழாவது பட்டம் சிவசங்கர தம்பிரானவர்கள் கிராமணி வகையராக்கள் அனைவருக்கும் ஆசிர்வதித்து மனப்பூர்ணமாய் யெழுதிக்கொடுத்த உடன்படிக்கையாவதென்னவென்றால் பூர்வம் திருப்போரூர் பங்குனிமேடு இந்த இரண்டு கிராமங்களும் உங்கள் வமிசத்தார் தானபடியால் மேற்படி கிராமம் மிராசுகளை சுவாமிகளுக்கு நித்திய படித்தரம் பஞ்ஜபர்வ முதலான பூஜைகளுக்கு தத்தம் செய்திருக்கிரபடியாலும பரிபூரணமான அஞ்சாவது பட்ட முத்துகுமார தம்பிரான் நாள்முதல் நம்முடைய நாள்வரைக்கும் உங்களாலே நேமித்திருக்கப்பட்ட பட்டிபலம் நாராயண கிராமணி, புதுப்பாக்கம் குழந்தை கிராமணி நமக்கு சர்க்காரில் மால் ஜாமீன் கொடுத்திருக்கிரபடியாலும் ஒரு காலா காலங்களில் ஷாமம் வந்தபோதெல்லாம் படித்தரம் முதலாகியதும் நீங்களே நடப்பித்து கொண்டு வருகிறபடியாலும் யிப்பவும் திருப்போரூர், பங்குனிமேடு, தண்டலம் யிந்தகிராம மிராசுகளும் சுரோத்திரிகமும் பயிர் வழிகம்பத்தம் மோதிர ரூபா ரொக்காதாயமும் சர்க்காரில் கொடுக்கப்பட்ட மேரைப் பணம் தோட்டங்கள், மானியங்கள், உபயங்கள், உண்டி, அபிஷேகம், ஆடையாபரணம், வீடுமடங்கள் இன்னம் சுவாமியைக்குறித்து யெந்த யெந்த வருமானங்கள் இருக்கிறதோ அந்த வருமானங்களை யெல்லாம் செவ்வைபடுத்தி செய்துக் கொண்டு வருகிறதற்கு யெனக்கு ஒத்தாசையில்லாமலிருக்கிறபடியால் யெப்போது மிந்த தலத்திற்கு நீங்களுடையவர்களா யிருக்கிறபடியாலும் யிதுமுதல் சுவாமிகளுடைய மேலெழுதியிருக்கும்வண்ணம் யாவத்தும

உங்களுடைய மனுஷாள் நம்முடனேகூடயிருந்துக்கொண்டு வரவு சிலவு கணக்கு முதலாகியதும் நீங்களே யெப்போதும் பார்த்துக் கொண்டு வரவேண்டியது. ஆனால் உங்களுடைய உத்திரவு இல்லாமலும் கணக்கு தாக்கல் செய்து வையாமலும் நாம் யேகதேசத்தில் ஒரு சிலவும் செய்கிறதில்லை. அப்படியுங்களுத்திரவு இல்லாமல் சிலவு செய்தால் நாமே உங்களுக்கு உத்திரவாதம் செய்குறோம். திருவாபரணம், அஸ்தார்த்திரம் நம்முடைய இருவர் பொதுவில் உக்கிராணத்திலிருக்கிறது. கிராமங்களுக்கும் தேவஸ்தானத்திற்கும் யிருக்கவேண்டிய சிப்பந்திகள் பால் பர்த்தாப்பு முதலாகியதும் நாமிருவரும் ஆலோசனை செய்து வைத்துக் கொள்ளுகிறது. உங்களுக்கு சமாதானம் இல்லாத சிப்பந்திகளை நாம்வைக்கவேண்டியதில்லை ஒருகாலத்தில் நமக்கு பிர்க்காலம் இந்த ஆதினத்துக்கு தம்பிரானவர்களை யேர்படுத்த வேணுமென்றால் மிகுந்த யோக்கியமானவராய் பார்த்து நம்முடைய இருவர் சம்மதியிலேயும் ஆலோசனை செய்து வைத்துக்கொள்ளுகிறது. இந்தப்படிக்கு நம்முடைய மனராஜியில் கிராமணிகள் அனைவருக்கும் யெழுதிக்கொடுத்த உடன்படிக்கை.

சிவசங்கர தம்பிரான்,

சாக்ஷிகள்.

திருப்போரூர்
வயித்தி குருக்கள் அருவேன்
வேதாந்த குருக்கள் அருவேன்

குறிப்பு:— இந்நான்கு உடன்படிக்கைகளும் அகன்ற ஓலையில், கலெக்டர் இரும்பு முத்திரையுடன் எழுதப்பட்டுள்ளது. ஐந்தாவது பட்டமடாதிபதி எழுதிக்கொடுத்ததை சென்ற செப்டம்பர் பத்திரிகை 26-வது பக்கத்தில் கண்டு அதையும் இதோடு சேர்த்துப்பார்க்கவும். (பா.)

லண்டன் நகரின் பெருமை.

லண்டன் நகரமானது சுற்றளவில் ஐம்பது மைலிருக்கின்றது; சிறிதும் பெரிதுமான தெருக்கள் எண்ணுயிரத்துக்கு மேலிருக்கின்றன. மக்களின் தொகை எழுபது லட்சம், வீடுகள் ஐந்து லட்சத்திற் கதிகமாகும். தந்தி, டெலிபோனுள்ள மாளிகைகளும், வியாபாரச் சாலை

களும், மூன்றுலட்சத் தெண்பதினாயிரத்திற் கதிகமாக விருக்கின்றன. ரங்கூன் பட்டணத்திலுள்ள பிரதான வைத்தியசாலை போன்ற மருந்துசாலைகள் இருபதுக்கதிகமாகவும் வேறு வைத்தியசாலைகள் ஐம்பதுக் கதிகமாகவு மிருக்கின்றன. சர்வகலாசாலை, உயர்தர ஆரம்பபாடசாலை, கீழ்த்தர ஆரம்பப் பள்ளிக்கூடம், கைத்தொழில் வித்தியாசாலை, யந்திரத்தொழிற் பள்ளிக்கூடம், மருத்துவப் பள்ளி, சட்டகலாசாலை. சரித்திரகலாசாலை மின்சாரக் கல்விச்சாலை, வியாபாரக்கலாசாலை, சித்திரக்கலாசாலை சங்கீத கலாசாலை, நடனகலாசாலை, பெண்களின் கலாசாலை, கடிதமெழுதவும் படிக்கவும் கற்பிக்கும் கலாசாலை, மையல்வேலை தையல் வேலை, பின்னல்தொழில் பூவேலைகளைக் கற்றுக்கொடுக்கும் பள்ளிக்கூடம் என் வகைவகையாக வகுத்திருக்கும்கலாசாலைகள் 500-க்கு அதிகமாகவும் மாணவ மாணவிகள் எட்டு லட்சத்திற்கு மேலு மிருக்கின்றார்கள். பட்டணத்திற்றான் பன்னிரண்டு புகைவண்டி நிலயங்களிருக்கின்றன. கூத்துமேடைகள் முப்பதுக்கு மேலும் அசையும் படக்காட்சி மேடைகள் நூற்றுக்கதிகமாகவு மிருக்கின்றன.

மன்னர்களின் வெண்கலச் சிலைகளும், மந்திரிமார்களின் உருவங்களும, படைத்தலைவர்களின் உருவங்களும், மகா யுத்தத்தில் மாண்டவரசர்களின் அடையாளங்களும், பின் சந்ததியாரறிந்து மகிழ தெருக்களிலுஞ் சாலைகளிலுந் தோட்டங்களிலுமாக நிறுத்தப்பட்டிருப்பவை ஆயிரத்திற் கதிகமாகும்.

ரங்கூனிலுள்ள ஜூப்லி ஹால்போன்ற பெரிய சபா மண்டபங்கள் இருபத்திநான் கிருக்கின்றன. அவற்றுள் ஒரு மண்டபம் பதினாயிரத்திற் கதிகமான நாற்காலிகள் பரப்பத்தக்கதாக விருக்கின்றது. மக்களின் சுக வாழ்விற்காகவும் பொழுது போக்குக்காகவுமா யமைத்துள்ள பூந்தோட்டங்கள் நூற்றுக்குமே லிருக்கின்றன. நாட்டுப்புறத்தாரும, பட்டணத்தாரும் கண்டு களிப்பதற்காகவும் காண்பதால் அறிவு வளரத்தக்கவைகளாகவும்காட்சிசாலைகளுங்கட்டிடங்களும்எழுபதுக்கதிகமாக விருக்கின்றன.

தங்குவதற்குள்ள சாப்பாட்டு விடுதிகளில் நாளொன்றுக்கு எழரை ரூபாய் முதல் இரண்டுபவுன் மூன்றுபவுன் வரையிலும் வாங்குகிற விடுதிகள் நூற்றுக்குமேலும் எழுரூபாயிலிருந்து இரண்டுரூபாய் மூன்றுரூபாயும் வாங்கப்படும் விடுதிகள், முந்நூற்றுக்கு மேலும் சிறு சாப்பாட்டுக்கடைகள் ஆயிரத்திற் கதிகமாகவு மிருக்கின்றவ.

எல்லாக் கட்டிடங்களிலும் பெரும்பாலும கீழ்த்தளமானது வியாபாரத்திற்காகவே உபயோகிக்கப்படுகின்றது. பர்மியநாடுபோல் ஓரிடத்தில் பெரிய சந்தைகூடி வஸ்துக்கள் விற்கப்படவில்லையானாலும். ஒவ்வோர் கடையும் ஒவ்வொரு பெரிய சந்தையை ஒத்திருக்கின்றது. சில விடங்களில் தள்ளு வண்டிகளில் பண்டங்களை வைத்து மக்கள் நடமாட்டமிருந்த வழியோரங்களில் வரிசையாய் வைத்து விற்றுக்கொண்டு மிருக்கின்றார்கள். சில விடங்களில் உயர்ந்த மண்ணெண்ணை வெளிச்சங்களும் சில விடங்களில் மின்சார வெளிச்சங்களும் விளங்குகின்றன. லண்டன் பட்டணத்தின் நடுவில் ஓர் ஆறு ஓடுகின்றது. பட்டணத்தின் தரை சமமாகவில்லாமல் சில விடங்களில் மலைபோலுயர்ந்தும் சில விடங்களில் தாழ்ந்து மிருக்கின்றது. தரையின் கீழ் புகைவண்டிக ளோடுகின்றன. அவற்றிலேறி வேண்டு மிடங்களுக்கேகலாம் தரையின்மேலோடும் மின்சார வண்டியிலேறி தெருத்தெருவாய் போகக்கூடும். ஆகாயரதம் வாரமொருமுறை லண்டனுக்கும் பெல்ஜிய நாட்டிற்கும் போய்வந்துகொண்டிருக்கின்றது.

லண்டன் பட்டணமானது உலகத்திலுள்ள பட்டணங்களில் பெரிதும் அதிகமான ஜனங்களையுடையது மெனச் சொல்லப்படுகின்றது. வெகுவாய் அழகமைந்ததாகவும் அகலமானதாகவும் வியாபாரத்தில் கிடைக்காத பொருள் இல்லையென்னும் படியாக மன்னர் வாழ்வதற்குரிய பட்டணமாகவு மிருக்கின்றது. வேறொருவர் பார்த்தால் மெத்த வியப்படைந்து களிப்படைவார்கள். ஆங்கிலேயரின் அடிமைபோல் வாழும் எமக்கு எவ்வித வியப்புகளிப்பு முண்டா

கவில்லை. அவரைக் கேட்டேன். அதற்கவர் உடனே, "நான் ஒரு மகம்மதியனை விட ஹிந்துவே கான்ஸ்தாந்தி நோபிலில் இந்தியர்களின் பிரதிநிதியாயிருக்க விரும்புவேன். ஏனெனில் இதன் மூலபலமாக ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப் பார்க்க துருக்கிக்கு ஆவல் என்பதை இந்திய மகம்மதியர் மனதில் பதியச் செய்வேன். ஆகையால் நான் மகம்மதலியைத் தெரிந்தெடுக்கமாட்டேன்; ஆங்கிலேயரால் பர்மா கோட்டையில் சிறை செய்யப்பட்ட லாலா லஜபதிராயையே தெரிந்தெடுப்பேன்" என்றார்.

லஜபதிராயை யௌவன துருக்கித் தலைவர் மாத்திரம் அறிந்திருக்கவில்லை. ஜப்பானிய அரசியல் நிபுணர்களும் அவரை யறிவார்கள். அவர் ஜப்பானிலிருந்தபோது அங்கே அநேக கல்வியாளர்களைச் சந்தித்து ஜப்பானைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டார். அவர் ஜப்பானியரின் காரியங்களைக் குறித்துப் பெரிதும் வியந்தார்; ஜப்பானைப்பற்றி ஓர் புத்தகமும் எழுதினார்.

——(S)——

வீ ர வி ஜ ய ன் .

இம்மகுடம்புனைந்த நூல் ஒன்று எமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதில் ஸ்திரீகளுக்குரிய கற்பு ஒழுக்கம் முதலியவைகளை நன்கு விளக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சந்தன மகாலிங்கம் என்பவரால் எழுதப்பட்டு, இராமநாதபுரம், வத்திராயிருப்பு நாடார் மகாஜன கிளைச் சங்கப் பொருளுதவியால் அச்சிடப்பட்டுள்ளதால், அதை ஒவ்வொருவரும் வாங்கி வாசிப்பின், அதனால்வரும் பொருள் அச்சங்கத்திற்கு ஒரு மூலதனமாகும். அதன் விலை அணா (6) ஆறே! மேற்படி சங்கக் காரியதரிசி ஸ்ரீ வே. மீ. வேலாயுத நாடாரிடம் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

(பத்திராதிபர்.)

——(0)——

பாண்டியனும், பாண்டியநாடும்.

இப் பெயரினைவாய்ந்த ஒரு நூல் எழுதப்பட்டு வருவதால் அதற்கு சில பழைய நம்மரபு அனுபவங்களும், நிலவுரிமை பாத்தியதையும், நிலமைக்காரருக்குரிய ஆதார அந்தஸ்தும், முதலிய அநுபவ ரிக்கார்டுகள் வேண்டியிருப்பதால் அவைகளை பரிசோதித்து நகல் எடுத்தனுப்ப எமது நண்பர் ஸ்ரீ பா. பி. இரத்தின பாண்டியரை நியமித்திருக்கின்றோம். அவரிடம் ஒவ்வொருவரும் தயவுசெய்து தங்களிடமுள்ள ரிக்கார்டுகளைக் காட்டுவரேல், அவர் எமக்கு நகலெடுத்து அனுப்புவாரென நினைக்கின்றோம்.

பத்திராதிபர்.

ந டு வு நி ல மை .

(ஆசிர்வாத நியாயி, சின்னக்காளாம்பட்டி.)

சேலத்தினின்று (10-9-24) வெளியான க்ஷத்திரியன் 2-வது பக்கத்தில் "சும்மா கிடந்த சங்கை ஊதிகெடுத்தான் ஆண்டி" என்னுந் தலைப்பின்கீழ் "காளிதாசன்" என்னும் தலைவால் காட்டாத நிருபர் ஒருவர் சமரஸ நிலையில் நிற்பதுபோற் காட்டி, கிராமணியாரைத் தாக்கும் முறையில் நடந்து கொள்ளுகின்றார். தற்போது நடந்துவரும் ஜாதிவாதத்திடையே இவர் போன்று புனைப்பெயருடன் வெளிவந்த பல அநாமதேய நிருபர்களுக்கும் தங்களது உண்மைப் பெயருடன் வெளிவாருங்கள் என பன்முறை அறிவுறுத்தியும் "கோலாற் கடாஅயக் குறியினும் புகலொல்லா, கோலா வுடம்பிற் கறிவு" என்றபடி அவர்கள் தெரிந்து

கொள்ளா வகைக்காய் நாம் வருந்துவதைத் தவிர வேறொருபயனுமின்று, ஆனால் இவர்கள் போட்டுக் கொள்ளும் இராஜா வேஷத்துடன் இதுவுமொரு வேஷம்போலும்.

நாடார் சகோதரர்கள் முன்னே நடந்து போகும்போது சும்மா போகாமல் கல்லையெடுத்துக் காலில் போட்டுக்கொண்டு குடையுதே யென்பது போல வழியில் கண்டவர்களை யெல்லாம் வாய்க்கு வந்தவாறு பேசினால் சும்மாயிருப்பார்களா அவர்களும் கதையை நடத்தத் தானே வேண்டியிருக்கிறது என்கிறார்.

இவர் விஷயந்தெரியாமல் குளறுகிறார். 'வந்து தடி சண்டை இறக்கடி கூடையை'' என்றபடி யார் வலிய வாதத்திற் காரம்பித்தவர்களென நமது க்ஷத்திரிய மித்திரனை முறையே துருவி யாராய்ந்துபார்த்தால்விளங்காமற்போகாது இவரைப்போன்ற குருட்டுப்பூனை விட்டத்திற் பாய்ந்தமாதிரி பாயவந்தவர்களுக்கு எவ்விதம் விளங்கும் ஒருபோதும் விளங்காது.

இவர் கிராமணியாரிடம் உள்ளதை யெல்லாம் நன்றாய் திறந்து பார்த்தமாதிரி பேசுகிறார். அவ்விதம் எங்கேயாவது தலைக்குந் தலையென்று வியாக்கியானஞ் செய்திருக்கிறாரா இவராலதை யொப்பிக்க முடியுமா? தங்களது ஜாதியை மாற்றவேண்டி முதநூலிலில்லாததை வழிநூலிலும், வழிநூலிலில்லாததை அதற்கு பிற்பட்ட நூல்களிலும் இடையிடையே கோர்த்து தாங்கள் எடுத்துக்கொண்ட (அயன்) இராஜபார்ட்டுக்குத் தக்கவாறு பொருள்கொண்டு வியாக்கியானஞ் செய்வதைப்போல கிராமணியார் ஒருபோதும் செய்யமாட்டாரென அறிவாராக.

புலவர்கள் சரியாகப்பாடியிருக்கும் நூல்களை ஆதாரமாகக் காட்டினால், அவர்களை மடையரென்றும், செருப்பாலடி யென்றும், காரித்துப் பென்றும் கண்ணை மூடிக்கொண்டு கசப்பாய் பேசுகிறார் என்கிறார்.

பலவர்கள் சரியாகப் பாடியிருக்கும் நூல்களைக் குற்றமென்று கூற அவரென்ன அறிவு கெட்டவரா? "சாணார் க்ஷத்திரியரா" என்னும் அற்பச்சுவடியை ஒருதலைப் பக்ஷமாம் வேண்டுமென்றே தாழ்வுபடுத்தி எழுதிக் கட்டிய குட்டிச்சுவரைக் கண்டு மெச்சிய இவருக்கும் அந்நூலியற்றிய முழுப்புலவனுக்கும் என்ன விமரிசை கொடுப்பது.

அவலை நினைத்துக்கொண்டு உரலை யிடித்தவன்போல அவ்வளவு ஆத்திரம் பிறந்த ஜாதியின் குணம் எங்குபோய்விடும் என்கிறார்.

அவலை நினைத்துக்கொண்டு உரலை யிடிப்பது தாங்கள்தான் என்பதை தற்போது எடுத்திருக்கும் வேடத்தினின்றும் இவர் அறிந்துகொள்ளாமைக்காய் நாம் வருந்தவேண்டியதாகிறது. அவன் கிடக்கிறான் குடிகாரன் எனக்கிரண்டு பட்டைபோடு, என்று ஒரு முழுக்குடியன் கேட்டமாதிரி, ஜாதி தடுமாற்றமடையும் இவருக்கு உண்மை க்ஷத்திரியர்களின் குணம் எங்கிருந்து விளங்கும் ஒருபோதும் விளங்காதென வறிவாராக.

"நாடறிய நாடார் சபையகத்தே பாஞ்சாலி, நாடறியத் தூசுரிந்த நாசத்தால்'' என்றகவிக்கு கிராமணியார் சொல்லும் அர்த்தத்தைப் படித்ததும் எனக்கு சிரிப்பு வந்துவிட்டது வெகுநேரஞ் சிரிப்பு அடங்கவில்லை நீங்கள் யாராவது பக்கத்திலிருந்தால் இன்னும் வேடிக்கையாக இருக்கும் என்கிறார்.

இவர் அக்கவிக்குரிய அர்த்தம் அப்படியல்ல இப்படித்தான் என்று தானே விளக்கி தம் புலமையைக் காட்டாமல் வெகுநேரமாயடங்காத சிரிப்பாயிவர் சிரித்திருப்பதிலிருந்தும், நீங்கள் யாராவது பக்கத்திலிருந்தால் இன்னும் வேடிக்கையாக இருக்கும் என்பதிலிருந்தும் இவர் சிறந்த சிரிப்பு மக்களாய்ப் பிறந்தோர் சிரிக்கும் மாதிரி யிருந்திருக்காது போலிருக்கிறது. கோபிஷம் புஷ்த்த காளைச் சிரிப்புப்போலிருந்திருக்கலாம். இப்போதாவது சிரிப்பை நிறுத்தியிருக்கிறாரோ இன்னும் வாயைத் திறந்தமட்டிலேதானிருக்கிறாரோ என்னவோ நாமறியோம். ஏனென்றால் வெகுநேரஞ்சிரிப்பு அடங்கவில்லை என்கிறாரல்லவா? சட்டியிலிருப்பதுதான் அகப்பையில்வருமேயொழிய வேறொன்றும் வராது என்றுதான் சொன்ன பழமொழியை மேற்கூறிய கவிக்கு அர்த்தஞ்சொல்லாமல் பெருஞ்

சிரிப்பு சிரித்ததிலிருந்து தனக்குந்தானென அறிந்து கொள்வாராக.

அவர் கட்டிக்கொண்டழுவதெல்லாம் "நாடார், சான்றார், கிராமணி" என்னும் மூன்று பட்டங்களே இதற்கு மேலாதாரமில்லை என்கிறார். இவர் நாடார்களுக்கிருக்கும் மூன்றையும் திட்டமாய்க்கண்டு சொன்ன இவரது நுண்ணிய அறிவுக்காக நாம் கொடுக்கலாம் நமது பரிசை. கேவலம் முப்பத்தாறு பட்டமும் பதினான்கு வித்தையும் எதற்கு. ஒன்றமையா தோகரிக் கன்றேது என்றபடி அவைகளெல்லாம் எதற்குதவும் ஒரு மூன்றுபட்டம் போதாதாம். உண்மையுள்ளவனை உண்மையுள்ளவன் தானென்று சாக்ஷியும் ரிக்கார்ட்டுஞ் செய்ய வேண்டுவ தவசியமா? பொய்யனுக்குத்தான் முப்பத்தாறு சாக்ஷியும் பத்துப்பதினான்கு ரிக்கார்ட்டும் வேண்டுமென அறிந்தடங்குவாராக.

பற்பல ஆலயக்கேசுகள் மூலமாய் சாணூர்கள் உயர்ந்தவர்களா தாழ்ந்தவர்களா என்பதை ஹைகோர்ட் ஜட்ஜிகள் மாஜிஸ்ட்ரேட் இவர்களின் ஒழுங்கான தீர்ப்புகள் காணப்படுகின்றன இவர்களையெல்லாம் கிராமணி ஏன் தூஷிக்கவில்லையோ என்று யோசித்தேன் ஆனால் பகிரங்கமாகத் தூஷிக்காவிட்டாலும் மனதிற்குள்ளாவது தூஷித்துச் சமாதானஞ் செய்து கொண்டிருப்பார் என்கிறார்.

எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான் படித்தவன் பாட்டைக்கெடுத்தான் என்ற வண்ணம் நிறைவேறிய பழங்கதையை இவர் விரிக்கிறார். அக்கேசுகள் நடந்தகாலத்திலும் இவர் போன்ற தப்பிலிகள் அழுதொழித்த நியதிப்படியேதான் ஹைகோர்ட்டு ஜட்ஜிகளும் மாஜிஸ்ட்ரேட்டுகளும் தீர்ப்பெழுதியிருக்கிறார்களென்பதை இன்றைக்கல்ல என்றைக்குந் துணிந்து கூறலாம். முக்கியமாய் கமுதிக்கேஸிலே எத்தனையோ படித்த புலவர்கூட வேண்டுமென்றே பொய்ச்சாக்ஷியங் கூறி புலம்பி யொழித்திருக்கிறார்கள். அவ்விதமிருக்க வினைக் கவர்மெண்டாரைக் குறைகூறுவதில் வரும் பயன்யாது எய்தவனை விட்டுவிட்டு அம்பை நோவதினால் யாதுபயன் எனவே இவர் ஊத்தாம்பெட்டிக்கு கடாக்குட்டி மேய்க்கவந்த கதைபோல கிராமணியார் ஒருவரையும் நியாயமின்றி தூஷிக்க முன்வரமாட்டாரென அறிவாராக. ஆனால் இன்னொன்று கவனிக்கத்தக்கது. அனாவசியமாய் தலையிட்டுக்கொண்ட ஒரு நிருபரைப் பற்றி இவ்வளவு பேச்சாவென்று நீங்கள் கேட்கலாம். அதற்கு நான் சொல்வதென்னவென்றால் தொழுமரத்திலே கையைமாட்டிக்கொண்டு தூக்கப் புலம்புங் குரங்குபோல நல்ல விஷயங்களில் நடந்துகொள்ளாமல் இவ்விதம் ஓர் மரபாரைப்பற்றி தூஷிக்கும் விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு சஞ்சலப்படாமல் இனியாவது உணர்ந்து கொள்ளட்டுமென்றேதான் நாம் எச்சரிக்க வேண்டியதாயிற்று. ஆதலின் இனிமேல் இந்நிருபர் நடுவு நிலைமைப்பற்றி நடந்துகொள்வாராக.

———(o)———

அலரி ஓர் விஷப்பூண்டு.

இவ்வுலகில் கெடுதல் செய்யக்கூடிய அல்லது நச்சுத் தன்மையைக் கொடுக்கக்கூடிய பூண்டுகள் அநேகம் உள. இவைகளில் அநேகம், ஓர்வேளை வைத்தியர்களுக்கும் மூலிகைகளைத் தேடித்திரிபவர்களுக்கும் தெரியுமே தவிர, பாமர ஜனங்களுக்கு விசேஷமாகத் தெரிவதில்லை. சிங்கார வனங்களிலும், பூந்தோட்டங்களிலும், வீட்டிற்கு முன்னால் அல்லது கொல்லைப்பக்கங்களிலும் பயிரிடப் படுவதினாலேயே அலரிச்செடி யாவருக்கும் தெரிந்திருக்கிறது. இந்தச் செடியின் நச்சுத்தன்மையைப் பற்றி அநேகர் அறிந்திருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். அப்படி அறிந்திருந்தாலும், அவ்வளவாகக் கெடுதல் செய்யாதெனக் கருதுகின்றனர். இதில் இரண்டு விதம் உண்டு. ஒன்று வெள்ளைப்பூவும் மற்றொன்று செகப்புப்பூவும் கொண்டுள்ளது. இந்த அலரி எவ்வளவு தூரம் நச்சுத்தன்மையை செய்ய வல்லதென்பதை

6090.

பின்னுல் கூறப்படும் சாராம்சம் தெரிவிக்கிறது.

1. ஓர் சமயம் அலரிச்செடியின் குச்சியினுல் ஒரு சட்டி பார்லிக் குழம்பைக் கலக்கியதால் ஐந்து யுத்தவீரர்கள் நச்சுத்தன்மையைப் பெற்று வாந்தி யெடுக்கலாயினர். அவர்களில் ஒருவனுக்கு கிறுகிறுப்பும் வயிற்றுவலியும் மற்றொருவனுக்கு ஸ்மரணை யில்லாமலுமிருந்தது.

2. கட்லோனியாவில் மார்ஷல்சூசெட் பட்டாளத்தைச் சேர்ந்த 300 பிரெஞ்சு யுத்தவீரர்கள் அலரிக்குச்சிகளினுல் வாட்டப்பட்ட இறைச்சித் துண்டுகளைத் தின்றதினுல் சங்கடத்திற் காளாயினர். அநேகர் இறந்தும் போயினர்.

3. மாட்ரிட்டுக்கு அருகாமையில் ஒரு பிரெஞ்சு யுத்தவீரன் பட்டை நீக்கிய அலரிக் குச்சியை வாட்டுவதற்கு உபயோகப்படுத்தினுன். இந்த மாமிசத்தைத் தின்ற பன்னிருவரில் எழுவர் இறந்தனர்.

4. மூன்று இட்டாலிய ஸ்திரீகள் சாராயம் சேர்ந்த அலரிக்கஷாயத்தை, பிராந்தியென நினைத்து குடித்துவிட்டனர். அவர்களுக்கு அதனுல், வயிற்றில் வலியும், வாந்தியும், போதையும், ரத்தக்கொதிப்பும் ஏற்பட்டது. ஆனுல் எல்லாரும் குணமடைந்தனர்.

மேற்கூறிய சந்தர்ப்பங்கள் யாவும் மனிதர்களுக்கு அலரியின் விஷத்தன்மையால் நேரிடும் அபாயங்களைக் குறித்ததாகும் இதற்கு முடிவு வைத்தியர்களுடைய வேலையாகும். இதே மாதிரி பிராணிகளுக்கும் மிகுந்த விஷத்தன்மையை கொடுக்கக்கூடியதாகக் கருதப்படுகின்றது. அதிகப் பசியினுல் வருந்தி வேறு கதியில்லாமல் போனுல் ஒழிய கால்நடைகள் சுபாவத்திலேயே இச்செடியில் இச்சை கொள்வதில்லை. இவைகள் இதனுல் கெடுதலையடைவது அபூர்வம். கால்நடைகள் அலரியினுல் நச்சுத்தன்மையையடைவதைப்பற்றி அமெரிக்கா அர்சோனு யூனிவர்ஸிடியில் செய்த அடியில்கண்ட பரீக்ஷைகள் விளக்குவதைப்பற்றி குடியானவர்களுக்குத் தெரிவிப்பது அசந்தர்ப்பமாகாது. அலரி விஷத்தினுல் கால்நடைகள் மரித்ததாக, பல ரிபோர்ட்கள் கிடைத்ததின்பேரில் மேற்கூறிய யூனிவர்ஸிடியில், அலரி விஷத்தினுல் சம்பவிக்கும் சரியான குறிகளைக் கண்டுபிடிக்கவும், மரணத்தை யுண்டுபண்ண, தேவையான இலைகளின் அளவை, நிச்சயிக்கவும் பல பரீக்ஷைகள் செய்துவரப்பட்டன.

இரண்டு குதிரைகள், ஒரு பசு, ஒரு கோவேறு கழுதை, அநேக ஆடுகள் முதலியவைகளைக் கொண்டு பரீக்ஷைகள் செய்யப்பட்டன. பச்சைத்தழைகள் காய்ந்த சருகுகள், மடல்கள் செடியின் துண்டுக் குச்சிகள், பட்டை வேர், இவைகளைக் கொடுத்து ஆராய்ந்ததில் அடியில் கண்ட விஷயங்கள் முடிவாகக் கொள்ளப்பட்டன.

1. அலரிகள் மனிதர்களுக்கும், கடித்து அல்லது கொத்தித் தின்பவைகளுக்கும், பண்ணையிலுள்ள நாற்காற் பிராணிகளுக்கும் தீங்கிழைக்கக் கூடியவைகள். பிராணிகள் தற்செயலாய் விஷமிட்டுப் போகின்றன.

2. உலர்ந்ததும் பச்சையுமான தழைகள் விஷத்தைக் கொடுக்கக்கூடியவை அல்லது கெடுதலைச் செய்யக்கூடியவை. மரணத்தைக் கொடுக்க, தேவையானது, அலரியின் பச்சைத் தழைகளில் 15 முதல் 20 கிராம் நிறையும், உலர்ந்த தழைகளில் 15 முதல் 30 கிராம் வரையிலுமாகும். பசுக்களுக்கு 10 முதல் 20 கிராம் பச்சைத்தழையும் 15 முதல் 25 கிராம் உலர்ந்த தழை வேண்டும். ஆடுகளுக்கோ ஒன்று முதல் 5 கிராம் நிறையுள்ள தழை அபாயத்தைக் கொடுக்கும் பட்டைகள், வேர்கள், மலர்கள் இவைகளினுல் அவ்வளவு அபாயமில்லை. ஏனெனில் இந்த வழியில், கால்நடைகளுக்கு அவ்வளவு விஷத்தன்மையைப் பெறுவதில்லை.

உஷ்ணம் அதிகரித்தல், நாடியின் வேகம் அதிகரித்தல், ஆசனம் குளிர்தல், தேகத்தில் உஷ்ணமிருத்தல், விழி பிதுங்குதல், மூக்கிலும் வாயிலும் நிறம் மாறி புண்ணுகியிருத்தல், இவைகளே இதனுல் சம்பவிக்கும் பொதுவான அபாயக் குறிகளாகும். மரணமடைவதற்கு முன் 24 மணி நேரம் முன்; சரியாய் வியர்த்து ஈர

மாகி, வாயும் தொண்டையும் வெந்து மலம் பச்சையாய் வயிற்றுக் கழிச்சலுடன் இருப்பதோடு, சாதாரண நிறத்துடன் நீர் அதிகமாக இறங்கும். இவ்வலரி ஆற்றலரி, ஈழத்தலரி, குங்குமவலரி, செவ்வலரி, நிரலரி, வெள்ளலரி என ஆறுவகைப்படும்.

மேற்கூறிய விஷயங்களினால் அலரி மிகவும் கெடுதலைச் செய்யக்கூடிய செடியென தெளிவடைய வேண்டும். கெடுதலைக் கொடுக்கக் கூடியதல்லாத அலங்காரச் செடிகளையே நாம் தேடவேண்டும்.

ஸ்ரீ வெற்றிவேல் நிர்த்தன விலாஸ,

கௌமார நாடி ஜோதிடசாலை.

—x—

1. இது எங்கள் முன்னோர்கள் காலந்தொட்டு பரம்பரையாய் கையாண்டுவந்த ஓலைப்புத்தகங்கள் சுமார் 3000000 ஜாதகங்களுக்குமட்டும் சுருதிகள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஜாதகத்திற்குரிய பலன்களை நேரில் பார்த்துக் கொண்டபின் உண்மைகளை யறிந்து அனுபவத்திற் காணலாம்.

2. இதில் கிரகங்களின் இராசிச்சக்கரம்ஆதியாக வருடம், மாசம், தேதி, நாள், நட்சத்திரம், நாழிகை, விநாடி, ஊர், வீதி, வீடு, வாசல், குலம், ஜாதி, மதம், பெயர், தந்தைவழி, தாய்வழி, தாய்தந்தையர், சன்மகாலம், அவர்கள் பெயர், பாட்டன்காலநிலைமை, தகப்பன் காலநிலைமை, தன்காலநிலைமை, தாய்தந்தையர், சகோதரம், ஆண்பெண் மொத்தம் இருப்பு, கடைகால நிலைப்பு, தன்னுடைய சகோதரம், ஆண், பெண், மொத்த உதிப்பு, மத்திமகாலத்தில் நிலைக்கக்கூடியவை முடிவுகால தீர்க்கம், விவாககாலம், மனைவிபெயர், புத்திரபாகம், ஆண், பெண், முடிவுகாலத்தீர்க்கம், தொழில், கண்டகாலம், தோஷம் தோஷ நிவாரணம் முன்பின் ஜென்மம் ஆயுள் வினை அப்போதைக்கப்போது ஆகும் காலபலன்களை திசாபுக்தியாகவோ கோசார ரீதியாகவோ விளக்குவதுடன் இதில் சொல்லாத அனந்த விசேட பலன்களையும் அவரவர் போசபாகத்துக்கு தக்கபடி விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளன. ஜாதகம் ஒன்றுக்கு சார்ஜ் ரூ 20-0-0

3. ஒவ்வொரு சாஸ்திரங்களுக்கும் முதலில அட்வான்ஸாக ரூபாய் 10 முன்னதாக கட்டவேண்டும். முதற்பாகங் கிடைத்தவுடன் மிச்சம் ரூபாய் பத்தும் கொடுத்தபிறகுதான் மேற்பாகம் தேடப்படும். எழுத்துக்கூலி ரூபாய் ஒன்றும் நோட்டுப்புஸ்தகமும் பிரத்தியேகமாக கொடுக்கவேண்டும். மற்ற விபரங்கள் நேரில் தெரியலாம்.

4. இரேகைசாஸ்திரம் ஒன்றைத்தவிர மற்றவைகளுக்கு அவரவர் ஜென்மகால ஜாதகச் சக்கரம் கொடுக்கவேண்டும். இரேகைசாஸ்திரத்திற்கு அட்வான்ஸ் ரூபாய் 7 முன்னதாக கட்ட வேண்டும். முதற்காண்டம் கிடைத்தவுடன் பாக்கி ரூபாய் 8-ம் கட்டவேண்டும்.

☞ எமது விலாசம்:—

செ. தங்கவேல் நாடார்,

கௌமார ஜோதிடசாலைத் தலைவர்,

வடிவாய்க்கால்தெரு, மாகாமகக்குளம், கும்பகோணம்.

—(o)—